உ
சிவமயம்





வடதுன்னை அல்லையம்பதி

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

மூன்றுவது

# கும்பாபிஷேக மலர்



## ALLAIMPATHY
## SRI SIVASUBRAMANIA SWAMY KOVIL

# MAHA KUMBABISHEHA MALAR

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**10-6-76**

University of Jaffna
235.5
KAR
0274(AR; Main)

Donated by
Mr. K. C. [illegible]ATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976-ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 28-ம் நாள் நடைபெறும்
அல்லையம்பதி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமிகோவில் மஹாகும்பாவிஷேக விழாவில்

## பங்குபற்றிய சிவாச்சாரியார்கள்

1. பிரதமகுரு:- பிரதிஷ்டா சிரோமணி கிரியாமணி
சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்.

2. கோவில்குரு:- சிவஸ்ரீ ச. சாமிக்குருக்கள்.

3. உதவிக்குருமார்:-
நியாயசிரோண்மணி சுப்பிரமணிய சாஸ்திரிகள்
சி. பாலஷண்முகசர்மா
சாமி சிவநாதக்குரு
சாமி சண்முகநாதக்குரு
க. சண்முகரத்தினசர்மா
ச. நாராயணசர்மா
ச. ஜெயந்திநாதக்குரு
ச. சாருநாதக்குரு

4. கிரியா கலாப முத்தாமணி
சிவஸ்ரீ ச. தேவராஜாக்குருக்கள்.

5. சிவஸ்ரீ ஐ. இராமலிகக்குருக்கள்.
6. ,, ச. சுப்பிரமணியக்குருக்கள்
7. ,, ச. சுப்பிரமணியக்குருக்கள்
8. ,, ச. சிவசுப்பிரமணியக்குருக்கள்
9. ,, கா. சாம்பசதாசிவக்குருக்கள்
10. ,, ஐ. சண்முகரத்தினக்குருக்கள்
11. சாதகம் ,, தா. மஹாதேவக்குருக்கள்
12. ,, கோ. சந்திரகாந்தசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வடதுன்னை அல்லையம்பதி

# ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில்



## மூன்ருவது

# கும்பாபிஷேக மலர்

## 10-6-76

UNIVERSITY OF JAFFNA LIBRARY
2007
2355 KAR
ARCHIVES
University of Jaffna
250274
Library
250274
Donated by:-
Mr K. C. KULARATNAM
250274
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு



# முருகன் ஸ்டோர்ஸ்

வடதுன்னை அல்லையம்பதி
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

மஹா கும்பாபிஷேக விழாவுக்கு எங்கள்

மனமார்ந்த வாழ்த்துக்கள்

# முருகன் ஸ்டோர்ஸ்


இல. 14, பஜார் வீதி, மட்டக்களப்பு.

உரிமையாளர் : இ. மூ. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## வெண்பா

ஆண்டுநள திங்களா மானதொரு வைகாசி
மாண்டநா ளீர்பதிநான் காகுமே - மாணல்லை
யம்பதி யார்சிவ சுப்ர மணியர்மா
கும்பா விஷேக தினங் காண்.

Donated by:-
Mr. K. C. KULARATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

வடதுன்னை அல்லையம்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணியப் பெருமானுக்கும், வினாயகர், ஆதிவீரபத்திரர், வைரவர், சண்முகநாதர், சண்டேஸ்வரர் முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்வஸ்திஸ்ரீ நிகழ் அநல ஆண்டு வைகாசித் திங்கள் 28-ம் நாள் வியாழக்கிழமை விசாக சுபமுகூர்த்தத்தில் (10-6-76) காலை 10 மணி 45 நிமிஷத்துக்கு மேல் 11 மணி 45 நிமிஷத்துக்குள் வரும் சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

இத்திவ்விய திருநாளில் நடைபெற்ற கிரியா காலங்களிலும் கும்பாபிஷேகத்திலும் கலந்துகொண்ட மெய்யன்பர்கள் யாவரும் அதிட்டசாலிகளே. இக்கோயிலைப் புதுப்பிப்பதற்கு இலட்சக்கணக்கில் பொருட செலவு செய்து நிறைவேற்றித் திருக்குடமுழுக்காட்டும் காட்சியை என்னாளும் நினைவில் வைத்திருக்கும்பொருட்டும் வளரும் சந்ததியினர் அறியும் பொருட்டும், சைவசமய வளர்ச்சியின் பொருட்டும் முருகன் அருட் பெருங்கருணையினால் இம்மலர் வெளிவருகின்றது.

அல்லையம்பதி ஆறுமுகேசன் அருள்பெறும் அன்பர்கள் இம்மலரைப் படித்து விரும்பும் பெறுபேற்றைப் பெற்றுய்யும்வண்ணம் கிருபாகடாட்சஞ் செய்யப் பிரார்த்தித்து உங்கள் இல்லங்களில் பாதுகாப்பது மிகவும் சிறப்புடையது.

எங்கள் வேண்டுகோட்கிணங்கி பல அறிஞர்கள் வெவ்வேறு அரும் பெரும் சமய விஷயங்களைப்பற்றி எழுதியுதவியிருக்கும் கட்டுரைகள் அடங்கியுள்ளது இம்மலர். இவ்விதம் எமது மலருக்கு அழகு மணமும் அறிவும் ஊட்டும் ஞானத்தைத் தந்த பெரியோர்கள் எல்லோருக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். இக்கும்பாபிஷேக மலருக்கு மட்டுமன்றி எமது கோவில் திருப்பணிக்கும், இம் மஹா கும்பாபிஷேகத்திற்கும் பலவகையாலும் பொருள் கொடுத்தும், பணஉதவி செய்தும் தொண்டாற்றிய அடியார்கள் அனைவர்க்கும் நாம் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அல்லையம்பதி முருகனின் திருவருள் பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ பிரார்த்திக்கின்றோம்.

இம் மலருக்கு மனமுவந்து விளம்பரங்கள் தந்துதவிய ஸ்தாபனங்கட்கும், விளம்பரங்கள் சேர்த்துத் தந்த அன்பர்கட்கும் எமது உளங்கனிந்த நன்றியையும் ஆசியையும் அளிக்கின்றோம். இம் மலரை அழகாக அச்சிட்டுதவிய சோதிடப்பிரகாச யந்திரசாலை அதிபர்க்கும் எமது மனமார்ந்த நன்றியாசியைக் கூறி, இம் மலரை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமண்யரின் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

ஷை கோவில் குருக்கள்
சாமி சியாமளன்
(அப்பு)

அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமண்ய சுவாமி கோவில்
வடதுன்னை, கரவெட்டி.

10-6-1976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் முருகா

அல்லைப் பெற்றான்

# அடைக்கலப் பதிகம்

## விநாயகர் துதி

சந்தரந் தன்னை வடபாற்சி ரல்லைத் தலமேவு மாறு முகவன்
அந்தமி லருள்பெற வடியேன் பதிக மழகா யார்த்தவர்க கணிய
பந்தம தோட்டிப் பத்தரைக் காக்கும் பகாரு ளானந்தப் பிள்ளை
எந்தனு தவரு திருந்திடு மென்று மின்மலர்த் தாட்டுணை துணையே.

## பதிகம்

சரவணப் பொய்கை தன்னிடக் தோன்றிச் சடாட்சர நாமங்கொள் தேவா
பிரணவப் பொருளைப் பேசிட வறியாப் பிரமனைச் சிறையிடு பிரானே
புரமொரு மூன்று மெரித்தவன் புதல்வா புரந்தரன் சிறைதவிர் புனிதா
கரமீ ராறுடைக் கடவுளே யல்லை அறுமுகா வுன்னடைக் கலமே.

தேவ சேனை பதியென நின்று தீச்செய லசுரரைத் தடிந்து
தேவர் மகிழ்கொளத் தெய்வகுஞ் சரியைத் திருமணம் புரிந்தசீர்க் குமரா
சாவணி கதிரை மலையினிற் கவினார் கானக் குறத்தியின் மணாளா
பாவணி யேற்கு மல்லைப் பதிபட ரறுமுகா வுன்னடைக் கலமே.

தந்தை நீயல்லவோ தனயனா னல்லனோ தாபமேன் சண்முகா வென்மேல்
எந்தைநீ யென்தய ரின்னு மகற்றிடா திருப்பதன் மர்ம மென்னே
முந்தைநாள் வினையினால் முத்திபெறு வழிகளில் முயலாத மூர்க்க னானேன்
விந்தையாய் வரமருள் வேலனே யல்லை யறுமுகா வுன்னடைக் கலமே.

நின்னடி யாருறவு நீணிலத் தென்றுதான் நேருமென் றேங்கு நெஞ்சம்
என்னையு நின்னடிமை யாக்கிப் புவிவரு மிடரெலாம் போக்கி யாளாய்
பன்னகா பரணன் பயின்றிடு பாலகா பச்சை மயில் வாகனா
அன்பருக் கெளியா யல்லையம் பதியுறை யறுமுகா வுன்னடைக் கலமே.

படிமிசைப் பதராய்ப் பித்தனாய்க் காலம் பாவியேன் போக்கியே யலைந்தேன்
கொடியாய்க் குக்குட முடையாய் நாளும் கொடியேன் புரிபல மனந்தம்
கொடியினிற் சிகிமிசை புலகினை வலம்வரு நுதல்விழி யிறையுமை பாலா
கடிகமழ் காவுய ரல்லைப் பதியம ரறுமுகா வுன்னடைக் கலமே.

மலைமகழ் மகனை மறந்தேன் மாற்றான் மண்ணினை யெனவே கொண்டேன்
அலைந்தே தலைந்தே னாரும் விரும்பா விஞ்ஞானி யாகியே நின்றேன்
இலையெனக் கின்ப மென்று மற்றோர்க ளிகழ்ந்திடக் கைவிட லழகோ
அலையென வருதய ரகற்றிடு மல்லை யறுமுகா வுன்னடைக் கலமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்க்குமிழ் வாழ்வை நிலையென நினைந்தே னினைமறந் தயலிடை நுழைந்தேன்
பார்க்குமிட மெங்குந் தோற்றிய பசும்புல் பாழ்நில மாயின தெரிந்தேன்
நீர்நின்ற நிலையென நெடுநாட் கேட்டன நிலையிலாக் கானலாக் கண்டேன்
பார்புக ழல்லைப் பதியமர் புலவா வறுமுகா வுன்னடைக் கலமே.

அல்லும் பகலும் படருந் துயரா லடியேன் துயில்செய லற்றேன்
செல்லு மிடமெலாஞ் சிறுமை யடைந்து சிந்தை நொந்து நைந்தேன்
ஒல்லும் வகையா னாய்ந்தே னொப்பி லுன்னடி சதமென வுணர்ந்தேன்
அல்லைத் திருப்பதி யழகிய வடிவே லறுமுகா வுன்னடைக்கலமே.

பற்றினே னின்றிருப் பாத மிறுகப் பற்றினே னென்றுமே யகலேன்
செற்ற முனக்கினு முளதோ செந்திலஞ் சீர்ப்பதி வாழ்செல்வக் குமரா
உற்ற துயரெலா மோட்டிச் சேயென வுவந்தே யெனக்களி செய்ய
அற்ற மிதுவே யல்லைப் பதிவள ரறுமுகா வுன்னடைக் கலமே.

தாயினு மினிமை சண்முகா கடைக்கண் தமியன்மேற் பாலித்தென்றும்
ஞாயிறு முன்னிமம் போலவென் நோய்பிணி நல்குர வுடனஞ் ஞானம்
பேயொடு பில்லி சூனியம் பகையெலா மெனைவிட் டொழிந்திடச் செய்வாய்
ஆயசெந் தமிழ்வள ரல்லைப் பதியொளி ரறுமுகா வுன்னடைக் கலமே.

திருச்சிற்றம்பலம்


அன்பளிப்பு

விநாயகர் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி, — அக்கரைப்பற்று.

உரிமையாளர் : ஏ. தம்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு



அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
மஹா கும்பாபிஷேக விழா சிறப்புற

## எமது வாழ்த்துக்கள்

தந்தன தனந் தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கை கொஞ்சிட மணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான
சங்கரி மனங்குழைந் துருக முத்
தந்தர வருஞ் செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே.

முருகன் அடியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements

# Western Jewellary Mart

**60, Sea Street,**

**COLOMBO-11.**

*Telephone :* **33977**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லையம்பதி ஸ்ரீ முருகனின் கும்பாபிஷேகத்திற்கு
எமது வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களுக்கு

சிறந்த ஸ்தாபனம்

# சக்தி நூல் நிலையம்

திருமலை வீதி, — மட்டக்களப்பு

அன்பளிப்பு

சாந்தி ஜுவல்லர்ஸ்
மெயின் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

அன்பளிப்பு

# குகன் ஸ்ரூடியோ

பருத்தித்துறை.
Phone: 524



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
திருவெண்ணீ றணியாத திருவிலூரும்
பருக்கோடி பத்திமையாய் பாராவூரும
பாங்கினொடு பலதளிகள் இல்லாவூரும்
விருப்பொடு வெண்சங்கம் ஊதாவூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லாவூரும்
அருப்பொடு மலர்பறித்திட் டுண்ணாவூரும்
அவையெல்லாம் ஊரெல்ல அடவிகாடே!

## புராணம்

துய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரியசெவ்வேள்
செய்யபேரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில் சீரடியார் வாழ்க வாழ்க இப்புவனம் எல்லாம்.

## கந்தர் அலங்காரம்

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை
வானவர்க்கு மேலான தேவனை
மெய்ஞ் ஞான தெய்வத்தை மேதினியில்
சீரார் திருவுடை செவ்வேல் குமரனை
சென்று கண்டு தொழ நாலாயிரம்
கண் படைத்திலனே அந்த நான்முகனே.

## கந்தரனுபூதி

எந்தாயு மெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர் வேலவனே யுமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ முருகா

முருகன் குகனென்று மொழிந்து உருகுஞ்
செயல் தந்து உணர்வொன் றருள்வாய்

### யாழ்ப்பாணம் வடமராட்சி வடதுன்னை அல்லையம்பதி

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தான

# உற்பத்தி வரலாறு

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்குமுன் வல்லியார் என்னும் பெரியார் தற்பொழுது கோவில் இருக்கும் இடத்தில் ஒரு மகிழமர நீழலில் வெள்ளை வட்டக்கல் ஒன்றினை வைத்துப் ''பெரிய தம்பிரான்'' வீரபத்திரக் கடவுள் என்று பூசித்துப் பொங்கல், விளக்கு வைத்தல் முதலிய வணக்க வழிபாட்டினைச் செய்துவரலானார். இப்பொழுதும் அயற்கிராமங்களிலுள்ள வயோதிப மக்கள் பெரியதம்பிரான் கோவில் என்றே சொல்லி வருகின்றார்கள்.

அனாதிமலமுத்த பரமபதியாம் சிவபிரானுக்கு மூத்தபுதல்வர் விநாயகர், அடுத்தவர் வீரபத்திரர், மூன்றாமவர் முருகப்பெருமான். மூத்தவராகிய விநாயகருக்கு வீரபத்திரக் கடவுள் பெரியதம்பி, அடுத்த முருகன் சிறியதம்பி ஆனகாரணங்களால் பெரியதம்பிரான் எனும் பெயர் வழக்கில் வந்தது என திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் ஒரு சமயம் முருகன் சன்னதியில் சொன்ன கதாகாலட்சேபத்தின்போது கூறிய மேற்கோள்.

ஆதிவீரபத்திரக் கடவுளை வழிபாடாற்றி வருங்காலத்தில் வைரவியார் என்னும் கல்வி அறிவாற்றல் உள்ள புலவர் ஒருவர் இருந்தார். இவர் நல்லூர் கந்தன்மீது அன்பு மிகக்கொண்டவர். போக்குவரத்து வழிப்பாதை வசதிகள் குறைந்த அந்தக்காலத்தில் பாதயாத்திரையாகவே சென்று வணங்கியும், ஸ்கந்தபுராணம் முதலியவற்றுக்கு உரைசொல்லியும் வருவார். அப்புலவர் ஓர்நாள் மதியம் உண்ட ஆயாசம் நீங்கும் பொருட்டுப் பெரியதம்பிரான் கோவில் மரச்சோலை நீழலில் சிறிதுநேரம் கண்ணயர்ந்தார். அச்சமயத்தில் முருகன் புலவரின் கனவிற் தோன்றி இந்தத் திருத்தலம் உண்டாக்கும் கிருபாநோக்குடன் காட்சி கொடுத்தருளினார். அத்திவ்விய தரிசனத்தைக் கண்ட புலவர் திடுக்குற்றெழுந்து குன்று தோறாடிய குமரனைக் கண்டதை நிச்சயிக்கும்பொருட்டு பகற்கனவு என்ற காரணத்தால் பக்கத்தே இருந்த வெண்மணலைப் பரப்பி அன்புருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்புருக ஆனந்த பாஷ்பஞ் சொரிய "ஆடிவரவேண்டும் மயிலே" என்னும் முதலுடைய விருத்தப்பா பாடினார், பாடியமாத்திரத்தில் அழகிய ஆண்மயில் தோன்றி தோகை விரித்தாடி தனது பாதச் சுவட்டினை மணலிற் பதித்துச் சென்றது. அக்காட்சியைக் கண்ட புலவர்பிரான் தனது பந்து மித்திரர்களைக் கூட்டித் தான்கண்ட காட்சியையும் மயில் பதித்த பாதச்சுவட்டினையுந் தெரிவித்து அவ்விடத்தில் ஒரு மடாலயம் அமைத்து வேல் வைத்துப் பிரதிட்டை செய்து கந்தசட்டி, கந்தபுராண பாராயணம் முதலியவற்றை நடாத்தி வந்தார். முருகன் கோவில்கொண்ட இடம் களனி சார்ந்த பூமி. கோவிலின் மேற்புறம் முழுவதும் செய்பயிர்த் தோட்டங்கள். சுமார் இருபது வருடங்களின் முன் கோவிலின் வடபாலும் தென்பாலும் ஏறக்குறைய ஐம்பது அடி உயர்வுள்ள செம்மண் குன்றுகளிருந்தன. அவை நாள்வீதம் கிருஷிகத்தின் பொருட்டும் பாதைகள் சீர்செய்யும் பொருட்டும், புதிய இல்லங்கள் அமைக்கும் பொருட்டும், மாட்டுவண்டி லொறி டிருக்டர்மூலம் அள்ளித் தற்பொழுது கீழ்நிலமட்டத்துக்கு வந்துவிட்டன. கிழக்குப் பாகம் இக்கோவில் வணக்க உருத்தாளர் வதிகின்றனர். இவ்வித நற்சூழ்நிலையில் குன்றமர்ந்த குமரன் தோன்றினான். வேல்முருகனை வழிபட்டு வருங்காலத்தில் புலவரின் வழித்தோன்றல்களாயினோர் தங்களின் சக்திக்கு ஏற்றவகையில் சுப்பிரமணிய ஸ்வரூப விக்கிரகம் செய்விக்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல ஸ்தபதியினுடைய தொழிற்சாலைக்குச் சென்றவர்கள் கண்ணுக்கு,

> அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
> பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாக
> கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
> ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகமுய்ய

என்னும் கச்சியப்பர் திருவாக்குக்கொப்ப ஓர் ஆறுமுகப்பெருமானின் திவ்விய ஸ்வரூபத்தைக் கண்டனர். அம்மூர்த்தியையே தங்களது ஆலயத்தில் வைத்து வழிபடவேண்டுமென்னும் பெருநோக்குடன் அதற்குரிய கிரயத்தைக் கொடுத்துப் பெற்றுவந்தனர். ஷண்முகப்பெருமானைக் கொணர்ந்து உரிய சுபமுகூர்த்தத்தில் பிரதிட்டை செய்து வழிபாடாற்றிவருங்கால் இக்கோவிலைச் சூழ்ந்த கிராமமக்கள் செல்வச்செழிப்பு முதலிய அபிவிருத்தியுடன் திகழலாயினர். அக்காலை கோவிலைக் கற்றிருப்பணியாக மஹாமண்டபம்வரை நிறைவேற்றி உரிய சிவாவிக்கிரகங்களை இந்தியாவிலிருந்து தருவித்துப் பிரதிட்டை செய்யும் நோக்குடன் செயற்பட்டார்கள். விநாயகர், மூலவராகிய வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர், ஆதிவீரபத்திரர், வைரவர், தரிசனப் பிள்ளையார், மயூரம், பலிபீடம், சண்டேஸ்வரர் ஆகிய சிவாஸ்வரூபங்களுக்கும் உற்சவமூர்த்திகளாகிய விதாயகர், வள்ளிதேவசேனாசமேத முத்துக்குமாரஸ்வாமி, வள்ளிதேவசேனாசமேத ஷண்முகமூர்த்தி முதலிய சுவாமிகளுக்கும் 1924-ம் ஆண்டு கார்த்திகை மாதம் மிருகசீர்ஷ நட்சத்திரத்தில் அக்காலை பிரபல குருவாயிருந்த மாப்பிள்ளைக்குருக்கள் மாதகல் ஆதீனம் வல்லிபுரதேவஸ்தான பிரதமகுரு வைத்தீஸ்வரக்குருக்களும் அவர்களுக்குப் பக்கபலமாய் மற்றும் குருமாரும் சேர்ந்து ஓர் மஹாகும்பாபிடேகஞ் செய்தனர். மண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டலாபிஷேகம்வரை பூர்த்திசெய்து இருகாலம் காலை மாலை நாள் ஒன்றுக்கு 2 படி அரிசிச்சாதம், வெற்றிலை பாக்கு வாழைப்பழம் முதலிய நிவேதனங்களுடன் பூசை செய்து வரலாயினர். மேலும் நைமித்தியமாக கந்தசட்டி 6 நாள் அலங்கார உற்சவம், ஆறாவது நாள் சூரசம்மாரம், அடுத்தநாள் திருக்கல்யாணம திருக்கார்த்திகை மணவாளக்கோலம் திருவாதிரை தைப்பூசம் முதலியன, ஸ்நபனஅபிடேகம் அலங்காரஉற்சவம் செய்தும் விநாயகஷஷ்டி திருவெம்பாவை மாசிமகம் பங்குனி உத்திரம் புதுவருடசங்கிராந்தி தைப்பொங்கற்சங்கிராந்தி சித்திராபூரணை வைகாசிவிசாகம் ஆனிஉத்திரம் கதிர்காமத்தீர்த்தம் ஐப்பசிப்பூரணை அன்னபிஷேகம் வெள்ளிக்கிழமை தீபாவலிமுதலியன அபிடேகங்களும் நடைபெற்றுவந்தன. மற்றும் நித்தியபூசைச் செலவினங்கள் வருமானங்கள்மணியம்சந்ததியினர் மேற்பார்வையில் நடைபெற்றுவந்தன.

மேற்படி கோயிலைச்சார்ந் தவூர்க்கிராமமக்கள் பொதுப்பரிபாலனத்தில் நிர்வகிக்கவேண்டுமென்ற பொதுநோக்குடன் வயதுவந்தவர்கள் வணக்கஉருத்தாளர்களாகவும் அதிற்தெரிவுசெய்யப்பட்ட ஆறுபேர் நிர்வாகஉறுப்பினராகவும் நிர்வாகஉறுப்பினருள் மூவர் தலைவர் காரியதரிசி தனாதிகாரியாகவும் மணியகாரனும் சேர்ந்து ஆலயபரிபாலனசபையாக 1940-ம் ஆண்டு நியமித்தார்கள். இருவருடங்களுக்கு ஒருமுறை கணக்குச்சரிபார்த்து மேற்படி சபையைக்கலைத்து புதியஉறுப்பினரை ஊர்பொதுமக்கள் தெரிவுசெய்வர் மணியம் நியமன உறுப்பினர் பரிபாலனசபை பொறுப்பேற்றதும் காலத்துக்கேற்றவகையில் கோயிலைப் புனருத்தாரணஞ்செய்யும் பெருநோக்குடன் சீர்செய்து மாதகல்ஆதீனம் வல்லிபுராலய பிரதமகுரு அமரர்கணபதிசாமிக்குரு அவர்களால் இரண்டாவது கும்பாபிஷேகஞ் செய்யப்பட்டது. மண்டலாபிஷேகத்தையும் பூர்த்திசெய்து நித்தியபூசை இருகாலமாக இருந்ததை உஷக்காலப்பூசை பால் நிவேதனம்வைத்து மூன்றுகாலப் பூசைசெய்யஆரம்பித்தனர். திருப்பணிகள்பல செய்யவேண்டியிருந்ததால் இ. மு. பெரியதம்பியும் அவரைச்சேர்ந்தோரும் விநாயகருக்குக் கற்றிருப்பணியாக ஆலயம்அமைத்தனர். ஆதிவீரபத்திரர், வையிரவர், வசந்தமண்டபம், யாகம்முதலியன ஆ. வி. கோபாலபிள்ளைஅவர்களால் கட்டப்பட்டன. தரிசனமண்டபம், ஸ்தம்பமண்டபம் உள்வீதிக்கொட்டகை நிலத்துக்கு சீமந்து வாசற்கோபுரம் அசையாமணிக்கோபுரம், வாகனசாலை, கொடித்தம்பம், கோபுரவாசக்கொட்டகை ஆதியாந் திருப்பணிகளை தனித்தும் பொதுப்பணத்திலும் நிறைவுசெய்து கோயில்கொடியேற்றித்திருவிழாசெய்யும் புதுப்பொலிவுடன் 1960 ம் ஆண்டளவில் திருவருட்டுணையால் பிரகாசித்தது.

1961பங்குனிமாதம் (22-3-61) ஓர்கும்பாபிஷேகஞ்செய்து வைகாசி விசாகநட்சத்திரத்தை தீர்த்தோற்சவாந்தமாகக் கொடியேற்றிப் பத்துத்தினங்கள் திருவிழாநடந்தன. பன்னிராண்டுஉற்சவம் நடைபெற்றது திருவிழாக்காலங்களில் நடைபெறும் விசேடவைபவங்களாவன.

கொடியேற்றத்துக்கு முதல்நாள் மாலை உற்சவஅனுஜ்ஞை விக்கினமில்லாமல் நிறைவுபெறவேண்டுமென்னும் காரணமாக விக்கினேஸ்வரப்பெருமானுக்கு விசேடவழிபாடாற்றி ஊர்க்கிராமத்தை காக்கும்படி காவல்தெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமசாந்திசெய்து ஆல
வமாகிய வையிரவரை திருப்திபண்ணும்பொருட்டு வாஸ்துசாந்தி முதலி
யத்தையும் பிறவீதிகளையும் சுத்தம்செய்யும்வண்ணம் கொடிச்சீலைப்பிரதட்சனம் கொடியே
யனவும் செய்யப்படும். மறுநாட்காலை கொடியேற்றம் மாலை யாகாரம்பம்
ற்றுதற்குரிய பூர்வக்கிரியைகள் மதியம்கொடியேற்றம் இரவு உற்சவங்கள் நடைபெ
இரவுஉற்சவம் நான்காம் திருவிழாவரை பகல் இரவு உற்சவங்கள் ஆருந்திருவிழா வசந்தோற்
றும். ஐந்தாந்திருவிழா பக்தானுக்கிரகஉற்சவம் எண்ணெய்சாத்துதல் எட்
சவம் ஊஞ்சல் ஏழாவதுநாள் தைலாப்பியங்கம் தீர்த்தோற்சவம்
டாவதுநாள் வேட்டைத்திருவிழா ஒன்பது தேர் பத்தாவது ஆசார்ய உற்சவம்
இரவு கொடியிறக்கம் இரவுஉற்சவம் சண்டேசுரஉற்சவம் இத்தியாதி விசேடவைபவங்
மறுநாட்பிராயச்சித்தம் அடுத்து வைரவர்மடை இனிதுநிறைவேற்றிவந்தன. முந
கள் முருகப்பெருமான் திருக்கருணையினால் சிலபல கஷ்டங்களை மனத்
லாண்டு தீர்த்தோற்சவம் செய்வதில் ஏற்பட்ட மிகக்குறுகியகாலத்தில் முருகன்
திலெண்ணி இ. மு. பெரிதம்பிஅவர்களால் தீர்த்தத்தடாகம் இளைபாற்றும
திருவருட்டுணைகொண்டு பூக்கொல்லைக்குள் நிகழச்செய்தமை போற்று
ண்டபப அமைத்து அடுத்தாண்டு தீர்த்தோற்சவம் தீர்த்தக்கரை வடபால்
தற்குரிய அருஞ்செயலாகும். அத்தோடு அவ்வன்பர் தெய்வமாகிய சந்தானகோ
சகலரும்வழிபடும் வண்ணம் மகப்பேற்றுக்குரிய வெள்ளிக்கிழமை மாலைப்பூசை
பாலர் ஆலயம் அமைத்துக்கொடுத்தார்.
நிகழ்ச்சியை பலஅன்பர்கள் சேவித்துப் பெரும்பேறடைகின்றனர்.

இக்காலகட்டத்தில் அழிவுதேய்வு முதலியனவற்றைத் திருத்திப் புதுப்பிக்க வேண்டியும் சம்புரோஷண எல்லைவந்தமையாலும் சென்ற **1974** வைகாசி 13-ம்திகதி பாலஸ்தாபனஞ் செய்து திருத்தத்திருப்பணிகளும் புதிய ஆலயங்களும் அமைத்துக் திருவருள்துணைகொண்டு புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நளவருஷம் வைகாசிமாதம் 28-ந்தேதி 10-6-76 வியாழக்கிழமை விசாகநட்சத்திர சுபசோபனவேளை 'திருக்குடமுழுக்காட்டு' வைபவம் நிறைவெய்தும் ஞாபகமாக இம்மலர் வெளிவருகின்றது.

அல்லையம்பதி ஆறுமுகேசன் கழலடி சமர்ப்பணம்

**சிவஸ்ரீ ச. சாமிக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sundaram Trading Co.,

**163, Main Street, Point Pedro.**

மின்சார இணைப்புக்கு தேவையான மின்சார உபகரணங்கள்
ஜோன்சன் அவுட்போட் மோட்டர் உதிரிப்பாகங்கள்
ரேட்மாஸ்டர் சைக்கிள்கள் முதலியன பெற்றுக்கொள்ள

**விஜயம் செய்யுங்கள்**

## சுந்தரம் ரேடிங் கம்பெனி
## 163, மெயின் வீதி,
## பருத்தித்துறை.

---

*அன்பளிப்பு*

**லால் ராஜா ரெயிலேர்ஸ்**
**பிரதான வீதி,**
பருத்தித்துறை.

உரிமையாளர் : வி. தங்கராசா

---

*With Best Complements of*

## *Buhary Textiles*

சகல விதமான ஜவுளி வகைகளுக்கும்
பாட்டா பாத அணிகளுக்கும்

**சிறந்த இடம்**

**புஹாரி ரெக்ஸ்ரைல்ஸ்**
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆலய சேவைசெய்த பெரியார்

## சுப்பர் வேலுப்பிள்ளை "சிலம்பு"

ஆஜாநுபாகுவான தோற்றம் 6 அடிஉயரம் அதற்கேற்றகைகால் முதலிய அவயவங்கள் நோயற்றஉடம்பு தலை முழு மொட்டை பிடரிக்குமேல் குடுமிகட்டக்கூடியதா சொற்பமயிர்கள் கோவணஉடைவயிற்றின்மேல் சிறிது துண்டு மூலைமடிப்பாக மடித்துகட்டிக் கொள்ளுவார். அதிகாலையில் துயிலெழுந்து நந்தவனத்துக்கு நீர்பாய்ச்சும்பொருட்டு துணைக்கு இருவரைத்தேடி அழைத்துவந்து ஒருவர் நீரிறைக்கவும் மற்றவர் பாத்திகளுக்குத் தண்ணீர் மாறவும் தான் துலாமிதித்தும் நிறைவேற்றுவார். அதன்மேல் காலைக்கடன் கழித்து ஸ்ஞானம்பண்ணி ஆசாரசீலராய்க் கோயிலுக்குட் பிரவேசித்துமண்டபம், வீதிகள்முதலியவற்றைக் கூட்டிப்பெருக்கித் தண்ணீர்தெளித்துந்தன்னுடைய அனுட்டானம், ஆலயதர்சனம் முதலிய நித்தியகடமைகளை நிறைவேற்றி அபிஷேகத்துக்குரிய பால், இளநீர் முதலியவற்றைத் தேடிக் கொணர்ந்து சேவைசெய்வார். எந்தவேலைசெய்தாலும், நடந்தாலும், இருந்தாலும் வாய் கந்தரலங்காரம் அனுபூதி முதலியசெய்யுட்களைச் சொல்லிக்கொண்டேயிருக்கும். அல்லது பராபரம் பராபரம் என்று சொல்லிக் கொண்டேயிருக்கும். ஓங்காரத்துள் ளொளிக்குள்ளே முருகன் உருவங்கண்டு தூங்கார் தொழும்புசெய்யார் எனும் அலங்காரச் செய்யுட்கமைய நடப்பவர். ஆலயசேவை முடிந்தபின்பே வீட்டுக்குப்போவார். வீட்டில் அவருக்கு மனைவிமட்டும்தான். மகப்பேறு இல்லை வீட்டில் உணவருந்தியபின் தனக்கும் மனைவிக்கும் கோயிற்றிருப்பணிக்குமாக தொழில்செய்வார். மனையாளின் சாப்பாடன்றி மற்றோரிடம் புசியார். மது மாம்ச பட்சணமில்லை. மனைவியால் சமைக்கமுடியாதவேளைகளில் கோவிற் குருக்களிடம் தனக்கும் மனையாளுக்கும் பிரசாதம் வாங்கிச்சாப்பிடுவார். வாங்கும் பிரசாதத்துக்குரிய பணத்தைக்கொடுத்துவிடுவார். இலவசமாகப் பெற்றுக்கொள்ளமாட்டார். கோவிற்திருத்தொண்டு செய்யவேண்டும் திருப்பணிவேலைகள் செய்ய வேண்டும். எஞ்சியநேரத்தில் தேவார திருவாசகங்களை பாராபணம்பண்ண வேண்டும். என்னும் உயர்நோக்கம் பெரிபுராணம் முழுதும் நாள்வீதம் படித்துமுடிப்பார். உடல், பொருள், ஆவி மூன்றையும் முருகனுக்கே சமர்ப்பித்த இல்லறஞானி கோயிற்கற்திருப்பணி செய்தபொழுது பணம்பற்றுக்குறை காரணமாக தனது தோட்டத்தை விற்றுத் திருப்பணியை நிறைவேற்றியவர். சமயகுரவர் நால்வரிடம் மிகவும் அன்புள்ளவர் நால்வருக்கும் கோயில்கட்டி பிரதிட்டைசெய்வித்தவர். குருபூசைத்தினங்களில் தன்னாலியன்றவரை அவர்களுக்கு திருமுழுக்காட்டி கறி அமுதுபடைத்து விசேட பூஜை வழிபாடாற்றி அவர்கள்பாடிய பதிகங்களைத் தோத்திரபாராயணஞ் செய்வார். மனைவி காலமானபின் தனது கிட்டிய உறவினர் ஒருவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து பிறதேசஞ்சென்று தொழில்செய்து தனதுவாழக்கைச் செலவுபோக மிகுதிப்பணத்தைச் சேகரம்பண்ணி அப்பணத்தைக்கொண்டு முருகன்திருக் கோயில் உள்வீதிகளுக்குத் தரைக்குச்சீமென்ற் போடுவித்தார். பரிவார மூர்த்திகளுக்குத் திருவாசி செய்வித்துவைத்தார். இத்தியாதி தொண்டுகள் செய்தும் திருப்தியடையாதவராய் ஷண்முகப்பெருமானைத் தேரில்வைத்துத் தெரிசிக்கவேண்டும் என்னும்பேரவா உந்தப்பெற்று பலருடையபொருளுத வியும் சரீரஉதவியும் தன்னுடைய தொண்டினையுஞ்சேர்த்து ஓர்அழகிய தேரி னைச்செய்வித்து தைப்பூசம் வைகாசிவிசாகம் ஆகிய இருதினங்களிலும் தேர் த்திருவிழாசெய்து வழிபட்டுவருங்கால் விருத்தாப்பியம் மேலிட முதுகுமட் டும் கூனல்வந்தெய்தியது. மற்றும் கண் காது பஞ்சேந்திரியங்கள் ஒருவித மான பாதிப்புமின்றிச் செயல்பட்டன பல் புழுக்கொடியல் சப்பும்வகையில் ஸ்திரமாகஇருந்தது. இவ்வாறு வாழ்ந்தபெரியாருக்கு இறுதிக்காலம் சமீ பித்து அதற்குரிய காரணியாய் ரணம் ஏற்பட்டு அவரது எண்பத்தேழாவது வயதில் 18-8-1957 விசாக நட்சத்திரத்தில் முருகன் திருவடிநிழலை யடைந் தார் செயற்கரிய செய்தபெரியார் சிலம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

சிறந்த படப்பிடிப்பாளர்

சரவணா
ஸ்ருடியோ
அச்சுவேலி.

அன்பளிப்பு

வாணி
புத்தகசாலை

80, வித்தியாலயம் வீதி,
திருகோணமலை.

*With Best Wishes From*

**Uhumiya Copra Stores**

*Uhumiya*

**Kurunagal**

*Prop:* **T. Arumugam**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ முருகா

### கோயில் நித்திய நைமித்திய வழிபாடாற்றிய

## குரு வம்ச வரலாறு

மாதகல் ஆதீன குரு பரம்பரை அக்காலத்தில் வல்லிபுராலய சேவையின் பொருட்டு இங்கு அழைத்துவரப்பட்டனர் சுமார் ஐந்து தலைமுறைக்கு முன் சிவஸ்ரீ அப்பாக்குருக்கள் அவர்களே முதல்வந்தவர். அவரின் பிற்சந்ததியாராகிய தம்பையாக்குருக்கள், குமாரசாமிக்குருக்கள், நாகேந்திரக்குருக்கள், மூவருஞ், சகோதரர், ஒவ்வொருவராக மாதகலிலிருந்தே இங்குவந்து கோயிற்பூசை குருக்கள் சேவை ஊர்க்கருமங்கள் ஆகியவற்றைச் செய்து வருங்காலத்தில் குடும்பமாய் இவ்விடத்தில் இருந்து சேவைசெய்யும்நோக்குடன் துன்னலையில் ஓரிடத்தில் குடியமர்ந்தனர். சிலகாலம் அவ்விடத்தில் வதிந்து பலவசதியீனங்கள் காரணமாக வேறிடம்தேடி முருகையன் கோயிலின் மேற்குப் பக்கத்திலுள்ள காணியிற்குடியேறினர். அக்காலை அந்தக்காணிக்குள் ஓர்கேணியும் இருந்தது. கேணியடிவளவு என்பதே அதன்பெயர். அந்தஇடமும் சரிவராமையால் இவ்வூர்ப் பொதுமக்களின் அனுசரணையுடன் இப்போதிருக்கும் அகப்பிட்டி என்னும் காணியிற்குடியமர்ந்தனர். இதிற்குடியமர்ந்தவர்கள் நாகேந்திரக் குருமகன் வைத்தீஸ்வரக்குருக்களும் குமாரசுவாமிக்குருக்கள் மகன் கருணாகரக்குருக்களுமே முன்னையோர் காலமாய்விட்டனர். அவர்களுக்கு பின் மாதகலிலிருந்து கருணாகரக்குரு தன்சகோதரி புத்திரர்களாகிய கணபதிசாமிக்குரு அவர் உடன்பிறவி சாமிக்குரு இருவரையும் அலழத்துவந்து தனது அந்தியகாலத்தையும் வல்லிபுராலயம் முருகையன் கோயில் மற்றும் இக்கிராமத்திலுள்ள ஆலயங்களுக்குக் குருசேவை ஊரவர் பணி இத்தியாதி கருமங்களை நிறைவேற்றவும் நா. வை. குருபுத்திரியை முன்னவராகிய கணபதிசாமிக்குருவுக்கு விவாகம் செய்துவைத்தார். இவை நிகழ்ந்தது 1929-ம்ஆண்டில் அவர்இஷ்டப்படி அண்ணர் வல்லிபுராலயம் முதலிய சேவைகளுக்குப் பிரதமகுருவாகவும் தம்பி பக்கபலமாகிய குருவாகவும் முருகையன்சேவை ஊரவர்பணி முதலியவற்றையும் தங்கள் கல்வி, கேள்வி, ஞானம் முதலிய நற்பண்புகளுடன் செயலாற்றிவந்தனர். இக்காலையில் 1948-ல் கு. க. இறைவனடிசேர்ந்தார். முருகையாவுக்கு இரு கும்பாபிடேகத்தையும் முதற் கொடியேற்றிய உற்சவத்தையும் கணபதிசாமிக்குருக்களே செய்தவர். 1959-ம்ஆண்டில் மேற்படி கணபதிசாமிக்குரு வல்லிபுராலயத்துக்குக் கொடியேற்றி சப்பரத்திருநாளன்று குருவாகவே இறுதியாத்திரையை மேற்கொண்டார். தற்சமயம் சாமிக்குருக்களும் புதல்வர்களும் ஆலயநித்திய நைமித்தியாதிகளையும் ஊரவர்கருமங்களையுஞ் செய்து இக்குடமுழுக்குத் திருநாளையும் கந்தன்கருணையுடன் நடாத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# Kuberan Agencies

**103, Trinco Street,**
**BATTICALOA.**

அல்லையம்பதி முருகப்பொருமானின்
கும்பாபிஷேகத்தித்திற்கு
எங்களின்

**தாழ்ந்த வணக்கங்கள்**

ஐஸ்பழம், ஐஸ்கிறீம், உருசிமிக்க
சிற்றுண்டிகளை சுவைத்து மகிழ

# சாந்தி கபே

**மந்திகை**

உரிமையாளர்:
சந்திரமௌலீஸ்வர ஐயர்

முருகனின்
மஹா கும்பாபிஷேகத்திற்கு
எங்கள் வாழ்த்துக்கள்



**சிவநடராசா ஸ்ரோர்ஸ்**
22, பஜார் வீதி,
மட்டக்களப்பு.

*With Best Wishes From*

# Sureka Jewellers

**112/18, Sea Street,**
**COLOMBO-11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்கரிய சேவை செய்த பண்டிதமணி
## சைவத் தமிழ்ப்பிரசாரகர் தா. முருகேசபிள்ளை
## தோற்றம் 10- 9- 1883 — முடிபு 4- 6- 1953

சிவதொண்டு சமூகசேவை — ''மேன்மைகொள் சைவநீதிவிளங்குக உலகமெல்லாம்'' என்ற பெருநோக்குடன் வாழ்ந்தவர். தமிழ்நாடு சென்று (அவர்காலத்தில் தென்இந்தியா) ஸ்தலதரிசனம் செய்து பலபிரமுகர்களிடம் அளவளாவி புராணஇதிகாசக்கதைகள் சொல்லியும் சமயப்பிரசங்கங்கள்செய்தும்வந்தவர் தன்குலதெய்வமாம் முருகன் தேவாலயத்துக்குத்தேள்வையுள்ள பூஜா உபகரணங்கள் பலவும் செய்வித்துக் கொண்டுவந்தவர். ஷண்முகப்பெருமானுக்குத் திருவாசியும் அலங்காரபீடமும் இந்தியாவிலிருந்து செய்வித்துக்கொண்டுவந்தவர். ஈழத்திருநாட்டில் உள்ள திருக்கோயில்களில் இவ்வித அலங்காரத்திருவாசி பீடலட்சணம்இல்லை. 5 அடிஉயரமுள்ள நிலைக்குத்துவிளக்கு ஒன்றும் செய்வித்துக்கொணர்ந்தவர். கோயிலில் உள்ள சிலாஸ்வரூப விக்கிரகிங்கள்முழுதும் அவரே கொண்டுவந்தவர் அக்காலத்தில் தலைமன்னார் தனுஷ்கோடி போக்குவரத்துச்சேவை சுங்கக் காவலர்களோடு தனது அறிவாற்றலுள்ள வாக்குச்சாதுரியத்தால் தடைகளைச்சமாளித்துப் பொருட்களைக்கொணர்ந்தார்.

முன்னேஸ்வரம் தேவஸ்தானம் பிரதம குருவும் தர்மகர்த்தாவுமாகிய சிவஸ்ரீ சோமஸ்கந்தகுருக்களோடு மிகஅன்போடு பழகியவர். அவர் மூலம் ஓர்வீரவாகுதேவர் செய்வித்துக்கொண்டுவந்து பிரதிஷ்டைசெய்வித்தவர். இக்கோயிலில் ஈசானத்தில் '' திருநீலகண்டத் தொண்டர் மடம் '' என்னும் பெயருடைய மடாலயம் அமைத்தும் திருநீலகண்டநாயனர் குருபூசையை நடாத்தி பலபேச்சாளர்களை அழைத்தும் தாமும் பங்குகொண்டும் அரியஉபன்னியாச (பிரசங்க)ங்கள் செய்வித்தும்மகிழ்ந்தவர். கோயிற் திருமஞ்சனக்கிணறு 18 முழம் வரைதோண்டியும் நீரூற்றுவராதிருந்தது. அந்தஊற்றுவரும் வண்ணம் கோயிலில்இருக்கும் பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரன்பேரில் ஓர்வெண்பா அகத்தியர் கமண்டலத்தைக் கவிழ்த்து காவிரி(ஆற்றை)நீரைபாயவைத்தவரே என்னும் பொருட்சுவையுடன் பாடியமாத்திரத்தில் நன்னீர்ஊற்று உண்டாகிப்பெருகியது. தெய்வீகபக்தி உள்ள இசைஞானி ஷண்முகப்பெருமான்மீது பாடப்பெற்ற திருவூஞ்சலும் இயற்றியவரும்அவரே.

நீறணிநெற்றியர் உருத்திராக்கமணிமாலை அணிந்த மார்பினர். அநுட்டான அநுபூதிமான் குருபக்திமிகக்கொண்டவர். இந்திய யாத்திரை முடித்து இவ்விடம் வந்தவுடன் தனதுபிரயாணக்குற்றங்களை நீக்கி நித்திய கர்மாமுடித்துக் கோவிலிலாவது குருக்கள்இல்லத்திலாவது சென்றுதரிசித்து தன்னாலியன்ற சன்மானஞ்செய்து முடித்தே மற்றும் பந்துமித்திர சமூகசேவைகள்செய்வார். தன்னுடைய அந்தியகாலத்தில் குருக்களைஅழைப்பித்து கோதானம் முதலிய தசதானங்களையும் தன்கையாலேமுடித்து மேலும்தான் வைத்துவணங்கிய பத்துரூபாஎடை வெள்ளியினாலான விக்கினேஸ்வரப்பெருமானையும் தங்கம் நவரத்தினக்கற்கள் உருத்திராக்கமணிமாலை திருநீற்றுப்



250274

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரம் முதலிய உபசாரங்களை தனது சுயஅறிவுடன் ஸ்ரீபஞ்சாட்சரசெபத்துடன் நெற்றியில் நீறணிவித்து இன்நிகழ்ச்சிகள் இரவுசுமார் பத்துமணியளவில் நடந்தவை. அதிகாலை வைகாசிச்சதயநட்சத்திரத்தில் எழுபத்தொராவதுவயதில் அன்னூர் ஆத்மா இவ்வுலகவாழ்வைநீத்து இறைவனடிசார்ந்தது இத்தியாதிஅளப்பரிய சேவைசெய்த பெரியாரை நமது சமூகநன்மைகருதி இத்திவ்யநன்னாளில் நினைவுகூர்ந்து தா. முருகேசமாமணியே எனவாழ்த்துவோமாக.

---

## இறை வழிபாட்டின் அவசியம்

### சிவஸ்ரீ சாமி விஸ்வநாதகுருக்கள்

அங்கிங்கெ னுதபடி எங்கும் பிரகாசமாகியும் அருவம் உருவம் அருஉருவம் என்றநிலையில் உலகத்திலே உள்ள சகலஜீவராசிகளையும் தாவரம்முதலானவற்றையும் உயிர்பெற்றுய்யும் வண்ணம் அனுக்கிரகித்து காத்தருள்புரிபவர் இறைவன். இவரே பதிஎனப்பொருள் பொருந்தியவர்.

சைவம், வைணவம், சாந்தம், கௌமாரம், சௌரம் காணபத்யம் எனஆறுமதங்கள் ஒருங்குஅமைந்து இயங்குவதே உருவவழிபாடு.

இக்காலத்தில் எங்கே பார்த்தாலும் எல்லோரும் பலவிதுன்பம் கஷ்டங்களை அநுபவித்துக்கொண்டு வருவதற்கு பலவித காரணங்கள்உண்டு.

மத தர்மத்தை ஆசாரங்களை பாதுகாத்து அதன் வழிநடவாமை பொறுமை, சமயக்கல்வி, அறிவு, குரு, தந்தை, தாய், தெய்வம் இவர்களிடத்தில் நடக்கவேண்டிய தன்மைகளை மீறிநடத்தல் மனநிதானமின்மை பொய், காமம், களவு, புலாலுண்ணல், மதுஅருந்தல் முதலானநிலைகளிலே தங்களைஅர்ப்பணித்து கடவுள் ஒருவர் இருக்கிறுர் என்ற நம்பிக்கை பக்தி விஸ்வாசம், ஆசாரம் என்ற உணர்வு இன்றி பலவிதகெட்டகாரியங்களில் மனதைத்திருப்பி அவஸ்தைப்படுகிறோம்.

ஆகவே சமயப்பற்று, குருபக்தி, பிதா மாதாவிடம் அன்பு, சமய வழியேவகுத்த ஆசாரநியமங்கள் யாவையும் இகழ்ந்து பாய்மரமற்ற தோணிபோல எமது வாழ்க்கை அமைந்துவிடுவதை காண்கிறோம்; அவலப்படுகிறோம்.

ஆகவே சைவசமயிகள் தங்கள் நியமஆசாரப்படி, சமயதீட்சைபெற்று தினமும் காலை மாலை இறைவழிபாடுசெய்து திருவருள் பெற்றுக்கொள்வது மிகவும்அவசியமாகும்.

உடலில் உயிர்தங்குவதற்கு அவசியம் உணவுகொள்ளுதல், நீர்பருகுதல், மலசலவிமோசனம்செய்தல் எவ்வளவு பிரதானமாக கருதப்படுகிறதோ இதேபோல உயிர்களிடத்தே வாழ்க்கைவளம்பெற இறைவழிபாடும் அவசியமாகும். தெய்வவழிபாட்டில் மனதைநிலை நிற்கச்செய்தல்வேண்டும். தெய்வவழிபாடு இல்லாதவர் பிறவிஎன்னும் பெருங்கடலை நீந்தமுடியாது. தெய்வவ ழிபாடுஇல்லையேல் பிறவி எடுத்தபயன்வீணுகும். ''எந்நன்றிகொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றிகொன்றமகற்கு என்ற தமிழ்வேதவாக்கின்படி நன்றிகொன்ற பாபத்திற்கும் ஆளாகிறோம். இக்கருத்தை ஒட்டியே தமிழ்வேத திருத்தாண்டகத்தில் திருக்கோயில்இல்லாத திருவிலூரும் என்று ஆரம்பித்திருக்கிறதைக் காணலாம்.

கடவுள் யார்?

உலகத்தை ஒரு சக்தி படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருளிவருகிறது இதுநமக்கு அனுபவமாகத்தெரிந்த விஷயம். பத்துமாதங்களில் தாயின்வயிற்றில் ஒருவிதஆபத்தும் இல்லாது குழந்தைஇருந்து பின்புபூமியில் பிறக்கிறது. இவ்வளவு பராபக்குவநிலையை உலகத்தில் தோற்றுவித்து இரட்சித்து இகபர சுகங்களை தந்து இறுதியில் மோக்ஷநிலையைத் தருபவரேஇறைவன்.

உதாரணமாக பசு இருக்கிறது. அதன்சரீரமுழுவதிலும் சேர்ந்து தான் பால்சுரக்கும்தன்மை அடைகிறது. அந்தப்பால் ஆனதுஅப்பசுவின் மடியில் இருந்து முலையின்வாயிலாக எமக்குகிடைக்கிறது. அதில் தயிர், மோர், வெண்ணெய் நெய்என்னும் வஸ்துக்களில் பெறுகிறோம். இதேபோல் பரமாத்மாவான இறைவன் பலஇடங்களிலும் பொருந்திஇருப்பவர் ஆன்மாக்களின் மனதுவாக்கு காயம் என்பன ஒருமித்தநிலையில் ஆலயம்சென்று மெய்யன்புடன் ஆசாரத்துடன் திருவுருவத்தை தரிசித்து மனத்தை ரூபத்திலே செலுத்திவணங்க வழிவகுத்தே ஆகமங்கள் வேதங்கள் திருவுருவவழிபாட்டை மேலாகவியந்து கூறப்பட்டுள்ளது. ஆகவேஎல்லாம் வல்ல கலியுகத்தெய்வமாம் ஸ்ரீமுருகப்பெருமான் திருவருளுடன் நிகழும் கும்பாபிஷேகவிழா சிறந்து நாட்டுமக்கள் சுபிட்சவாழ்வுபெற இன்றியமையதான திருவுருவவழிபாடு துணைசெய்ய பெரிதும் பிராத்தனை செய்வோமாக.

சுபம்

With Best Complements

Nihalwathy Engineering

398, Main Street,
Point Pedro.

Prop: A. H. H. Ariyadasa

With Best Complements

Geneva Watch & Co,

Main Street,
Point Pedro.

Prop: A. S. M. Rafeek

அன்பளிப்பு

எம். வேதநாயகம்

49, செட்டியார் தெரு,
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதிதுணை

# கும்பாபிஷேக வைபவ மகிமை

## உத்தராயணச் சிறப்புப்பணி — 15-1-72

கும்பாபிஷேக வைபவமானது ஆதிமுதல் முடியும்வரை ஒன்பது சிறப்புகளைக் கொண்டது.

1. சாந்தி கர்மங்களின் சிறப்பு
2. மண்டபச் சிறப்பு
3. கும்பச் சிறப்பு
4. அக்கினி வழிபாட்டின் சிறப்பு
5. மூர்த்தி கர்மங்களின் சிறப்பு
6. ஸ்பர் சாகுதியின் சிறப்பு
7. கும்பாபிஷேகச் சிறப்பு
8. மஹாபிஷேகச் சிறப்பு
9. மண்டலாபிஷேகச் சிறப்பு என்பவையாம்.

மேற்கூறிய விஷயங்களைப்பற்றி சம்ஸ்கிருத பிரமாணங்களுடன் விளக்கினுல் அதிக விரிவு படுவதுடன் சம்ஸ்கிருத சுலோகங்களை அச்சிடுவதிலும் அதிக சிரமமேற்படுமாகையால் நன்கு விளங்கக்கூடிய முறையில் சம்ஸ்கிருத பிரமாணங்களின் சாராம்சங்களைச், சுருக்கமாகத் தமிழில் கூறுவாம்.

**சாந்திகர்மங்களின் சிறப்பு :-**

கும்பாபிஷேகம் நடைபெறுவதற்குச் சில தினங்களுக்கு முன்பு கணபதிஹோமம், நவக்ரஹ சாந்தி, ரஷோக்ன ஹோமம் முதலியகருமங்கள் நடைபெறுகின்றன. இதன்தத்துவங்கள் எக்கருமத்திற்கும் முதலில் முழுமுதற் கடவுளான கணபதியை வணங்கவேண்டும். ஒன்பது கோளங்களாக விளங்கும் நவக்ரகங்களுக்கிடையே இருந்து அல்லற்படும் நாம், அத்துன்பங்களிலிருந்தும் நீங்கி அசுரர் முதலானவர்களால் ஏற்படும் தடையைத் தகர்த்து விநாயகப்பெருமான் இடையூறுகளைத் தடுத்துக்கொண்டு முன்நிற்க கும்பாபிஷேகத்தை நடத்துவதற்குச் செய்யும் பிரார்த்தனைக் கருமங்களாகும்.

**மண்டபச் சிறப்பு:-**

சுமார் ஏழு அல்லது எட்டுமுழ உயரங்கொண்ட பன்னிரண்டு தூண்களைக் கொண்டதும், நான்கு வாயில்களைக் கொண்டதும், சற்சதுரமானதும், விதானம், தோரணங்கள், வாழைகள், கமுகுகள், கரும்பு, மாவிலைகள் இவைகளால் அலங்கரிக்கப்பட்டதாக யாகமண்டபம் அமைக்கப்படுகின்றது. துவாரபாலகர்கள், அஷ்டதுவஜங்கள், அஷ்டநாகங்கள், தசஆயுதங்கள் இவைகளும் மண்டபத்தை அலங்கரிக்கின்றன. இவ்விதமான யாகமண்டபத்தின் தத்துவம் யாதெனில்; பன்னிரண்டுதூண்களும் மேடம் முதல் பன்னிரண்டு ராசிகளாகவும்; நான்கு வாயில்களும், தோரணங்களும் சாந்திமுதலான கர்மங்களாகவும்; ஒவ்வொரு வாயிலிலும் சரஸ்வதி மஹாலக்ஷ்மி ஆகிய இருவரும் இருப்பதாகவும்; கூறப்பட்டுள்ளன. பிரும்ம, விஷ்ணு, ருத்திர, மனு முதலான சூத்திரங்களுள் ஏதாவது ஒரு சூத்திரத்தைப் பின்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தினுள் நூல்கள் அடிக்கப்பட்டு சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன இவைகளுக்குப் பதங்கள் என்றுபெயர். இவை பிரும்மபதம், தேவபதம், மானுஷபதம், ராக்ஷயபதம் என்று நான்கு பதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிரதானகும்பங்கள் வைக்க பிரும்பபதமும், பரிவாரகும்பங்கள் வைக்க தேவபதமும், பூஜைசெய்யும் குரு சஞ்சரிப்பதற்காக மானுஷபதமும் தோரணங்கள் வாழைகள் முதலான கட்டுவதற்கு ராக்ஷயபதமும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவ்விதமாக அமைக்கப்பட்ட யாகமண்டபம் ஆறு அத்துவாக்களின் வடிவமாக அமைந்துள்ளது. பதங்களை 'பதாத்வா' என்றும் பதங்களின் நடுவை 'வர்ணுத்வா' என்றும் கும்பங்களின் நடுப்பகுதியை 'மந்த்ராத்வா' என்றும், மூர்த்தியின் நடுப்பகுதியையும் திரவியங்களையும் 'தத்வாத்வா' என்றும் மண்டபத்தின் மேல், கீழ்ப்பகுதிகளை 'புவனுத்வா' என்றும் இந்த ஐந்து அத்வாக்களையும் உள்ளடக்கிய மண்டபத்தின் மேற்பகுதியை 'கலாத்வா' என்றும் ஆகமங்களில் விதந்து கூறப்பட்டுள்ளது. இம்மண்டபத்தைச் சுற்றி இருபத்தெட்டுக்கும்பங்கள் வைக்கப்படுகின்றன. இக்கும்பங்களில் எட்டுத்திக்குப் பாலகர்களையும், சப்தகுருக்களையும், மஹாவிஷ்ணு, பிரும்மா முதலானவர்களையும் இன்னும் மூர்த்திகளுக்கு அனுகுணமான தேவதைகளையும் குறிக்கப்பட்டகும்பங்களில் ஆவாகனம் செய்து பூஜிக்கின்றனர். இவைகளைத்தவிர மண்டபத்தினுள் ஈசானமூலையில் யாகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பிரதானமாக யாகேஸ்வரன் வடக்கிலும் யகேஸ்வரி தெற்கிலும் மேற்குமாக கும்பம் கெண்டி ஆகிய இரண்டிலும் வைக்கப்பட்டு முறையே ஆவாஹனம் செய்யப்படுகின்றனர். இவர்கள் யாகத்தைக் காப்பாற்றுகின்றவர்களுள் பிரதானமானவர்களாம். பிரதானக் காவலர்களாக விளங்குகின்ற இவர்களுக்கு காவலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆயுதமாக முப்பத்தாறு தர்ப்பைகளால் சிறப்பாக அமைக்கப்பெற்ற ஞானகட்கம் (வாள்) அளிக்கப்படுகின்றது. மண்டபத்தில் வடமேற்குமூலையில் கார்த்திகை ரோகிணி ஆகிய இருசக்திகளோடு கூடிய சந்திரகும்பம் மண்டபாங்குர அதிதேவதையாகக் கிழக்குமுகமாக வைக்கப்படுகின்றது. மண்டபத்தை மந்திரத்தினுல் பரிசுத்தம் செய்வதற்காகப் புண்யாக கும்பம் நிருதிதிக்கில் (தென்மேற்கு) வைக்கப்படுகின்றது. இதுவே யாகமண்டபத்தின் சிறப்பாம்.

கும்பச்சிறப்பு :-

கும்பமானது ஈசனின் உடலாக அமையப்பெற்றதாம். அதாவது கும்பம் உடலிலுள்ள மாம்சப் பகுதியாகவும், நீர் இரத்தமாகவும். அதில் போடப்படும் நவரத்னங்கள் எலும்புகளாகவும், அதில் சுற்றப்படும் நூல் நாடி நரம்புகளாகவும், மேலே சுற்றப்படும். வஸ்திரம் தோலாகவும், கும்பத்தில் வைக்கப்படும் தேங்காய் தலையாகவும், கூர்ச்சம் கூந்தலாகவும், மாவிலை சடைப் பகுதியாகவும், மாதுளம்பழ முத்துக்கள் பற்களாகவும், மந்த்ரம் பிராணனுகவும், சந்தனம், புஸ்பம் முதலியவைகள் ஏனைய பகுதிகளாகவும், கும்பரத்னம் ஜீவனுகவும் அமையப்பெற்றதாகும்.

அக்கினி வழிபாட்டின் சிறப்பு :-

பிரதான குண்டத்தில் அரணில் கடைந்தோ சூரிய காந்தக் கற்களிலிருந்தோ எடுக்கப்பட்ட அக்கினியானது, தக்க சம்ஸ்காரங்களின் மூலம் சிவாக்கினியாக்கப்பட்டு பூஜை செய்யப்படுகின்றது. பின் அந்தப் பிரதான குண்டத்தின் அந்தந்த திக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட அக்கினி ஆஹவனீயம், தக்ஷிணுக்னி, கேவலாக்னி, கார்கபத்யாக்னி, விருத்தாக்னி, சாமான்யாக்னி, யௌவனுக்னி, பாலாக்னி என்று பூஜிக்கப்பட்டு அந்தந்தக் குண்டங்களில் அந்தந்த மூர்த்திகளையும் அந்தந்த மந்திரங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் சொல்லி ஹோமங்கள் செய்வதற்காக அந்தந்த குருமார்களிடம் கொடுக்கப்படுகின்றது. இதற்கு அக்கினி விபஜனம், என்று பெயர். இந்தஅக்கினிகளை ஒடுக்கும்பொழுது பாலாக்னிமுதலாக ஒடுக்கப்படவேண்டும். அக்னிமுகா : தேவா : என்று கூறப்பட்டுள்ளபடியினால் அக்கினியின் மூலமே ஆண்டவனை திருப்தி செய்வது நம்மதத்தில் முக்கியமானது. இந்த அக்கினிகளில் குறிப்பிட்டசமித்துக்கள், குறிப்பிட்டதானியங்கள் எல்லாம் ஹோமமம் செய்யப்படுவதுடன், குறிப்பிட்டளவு எண்ணிக்கை மூலமந்திரத்தைச் சொல்லி ஹோமமம் செய்யப்படவேண்டுமென்பது ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. எவ்வளவுக் கெவ்வளவு எண்ணிக்கைகளைக் கூட்டி ஹோமமம் செய்கின்றோமோ அவ்வளவு மூர்த்திகளில் சான்நித்யம் ஏற்படும். இதுவே அக்னிவழிபாட்டின் சிறப்பாகும்.

## மூர்த்தி கர்மங்களின் சிறப்பு :-

பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகளை கழுத்தளவு நீரில் இருத்துவது 'ஜலாதிவாசம்' என்றும்; நெல்லில் இருத்துவது 'தான்யாதிவாசம்' என்றும் கூறப்படும். முதலில் நீரிலும் அடுத்து பீஜத்திலும் இருந்து பின் உருவங்களைப் பெறுகிறான் என்பது இதன்கருத்து. இதன்பின் யாகமண்டபத்தின் வடபுறத்திலே போடப்பட்ட மரம் கம்பளி முதலான ஐந்து பொருட்களான படுக்கையில் கிழக்கே தலைவைத்து மேல்நோக்கிய முகமாகப் படுக்கவைப்பது 'சயனாரோபணம்' என்று கூறப்படுகிறது. இது கர்ப்பத்தில் சயனித்திருப்பதுபோல் அமைப்பதாகும். உருவ வழிபாட்டின்மூலம் நாம் மானஸீக வழிபாட்டிற்குச் செல்லவேண்டும். ஆதலால் இங்ஙனம் செய்யப்படும் மூர்த்தி கர்மங்களால் மூர்த்தி நம்வழிபாட்டிக்குகந்த சிறந்த உருவ அமைப்பைப் பெற்றதாகின்றது. இதுவே மூர்த்தி கர்மங்களின் சிறப்பாம்.

## ஸ்பர்சாகுதி :

கும்பாபிஷேகத்தின் முதல் நாளிரவு மூர்த்தியை புஷ்பமாலைகளால் ஒன்பது பகுதிகளாகவோ அல்லது மூன்றுபகுதிகளாகவோ பிரித்து, பாதத்திலிருந்துமுறையே பிரும்மபாகம் விஷ்ணுபாகம், ருத்ர பாகம் எனக்கருதி அக்னிக்கும்பிம்பத்திற்கும் ஒன்பதுஇழைகள்கொண்ட நூலினால் 'நாடீசந்தானம் என்று சொல்லப்படும்தொடர்வை ஏற்படுத்திஎல்லாக்குண்டங்களிலுமுள்ள' அக்கினியில், அந்தந்தப்பகுதிக்குரிய நியாசம்செய்து நெய்யினால் ஹோமமம் செய்து எல்லோரும் ஒருமுகமாக பூர்ணாகுதியைச்செய்ய ஆரம்பித்து 'ஸ்வா' என்று அக்னியில்நெய்யில் பாதிப்பகுதியை ஹோமம்செய்து பிரதானாச் சாரியார் முதலாக நாடியைத் தொட்டுக்கொண்டே பிம்பசமீபத்தில் சென்று முறையேஅந்தந்த இடத்தில் நின்று சாந்தி கும்பத்தின் தீர்த்தத்தினால் அந்தந்தஇடத்தில் அவரவர் புரோக்ஷணம்செய்து, நியாசம் செய்து "ஹா" என்றுசொல்லி அந்தந்தப் பகுதியில் எஞ்சிய நெய்யை ஊற்றுவதே 'ஸ்பர்சாகுதி' எனப்படும். இதுபோல் மூன்றுமுறை செய்யப்படவேண்டும். இவ்விதம் செய்வதினால் மும்மூர்த்திகளின்கலைகளும் அஷ்டமூர்த்திகளின் அம்சங்களும் அக்கினியில் செய்யப்பட்ட எல்லா மந்திரதந்திரங்களும் மூர்த்தியில் வந்துசேருவதாகும். இதுவே ஸ்பர்சாஹுதி எனப்படும். இவ்விதமாக 9 அம்சங்கள்(சிறப்பு)கொண்ட கும்பாபிஷேகத்தை நடாத்தியும் தரிசித்தும் பிறவிப்பிணியை அகற்றி பிறவாநிலையை அடைந்து மானிடப் பிறவியைப் பயன்பெறச் செய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கும்பாபிஷேகச் சிறப்பு :** கும்பாபிஷேக தினத்தன்று ஷோடசோபசார பூஜைகள் நடைபெற்றுவாத்யகோஷத்துடனும் வேத, ஸ்தோத்ரபாராயணத்துடனும் கும்பங்கள் எடுக்கப்பட்டு வலதுபுறமாக கோவிலைப்பிரதக்ஷிணம்செய்து முதலில் கர்ப்பக்கிரகத்தின்மேல் கட்டப்பட்ட ஸ்தூலலிங்கம் என்று கருதப்படும் கோபுரத்திற்கும், பின் உள்ளே உள்ள மூர்த்திகளுக்கும் அபிஷேகம் செய்யப்படுகின்றது. பரிவார மூர்த்திகளுக்குப் பூஜைக்கிரமப்படி செய்வது உத்தமம். ஒரே சமயத்தில் செய்வதை ஆகமங்கள் தடைசெய்கின்றன. அக்னி ஆத்மா, கும்பம், எல்லாவற்றிலுமுள்ள ஈசனின் அம்சங்களை ஐந்துஅவரணங்களையாப. ஒன்றுசேர்த்து பக்தர்களுக்கு அருள் புரிந்திகொண்டிருக்க மூர்த்தியில் ஒடுக்குவதாகும். இதுவே கும்பாபிஷேகத்தின் சிறப்பாகும்.

**மஹாபிஷேகச் சிறப்பு :** அதன் பின் பஞ்சாமிர்தம், பால், இளநீர் முதலிய திரவியாபிஷேகங்களைச் செய்தல் மஹாபிஷேகமாகும். மஹாபிஷேகத்தினுல் ஈசன், உக்ரம், தணிந்து அருள்சக்தி ஓங்கி குளிர்ந்த அருள் நோக்கைப் பெறுகின்ருன் என்பது கருத்தாகும். இதுவே மஹாபிஷேகச் சிறப்பு.

**மண்டலாபிஷேகச் சிறப்பு :** கும்பாபிஷேகத்தின் பின் " திரிபக்ஷ " நாற்பத்தைந்து நாட்களோ, அல்லது மூன்று பத்துநாட்கள் (முப்பது நாட்கள்) இருபக்ஷங்களோ " த்விபக்ஷ " அல்லது பதினைந்துநாட்களோ 'ஏகபக்ஷ' தொடர்ந்து மூர்த்திக்கு அபிஷேகம் செய்தல்வேண்டும். இந்த அபிஷேகங்களால் மூர்த்தியின் ஈசனது சான்னித்யம் நிலைபெறுவதாகும். இந்த மண்டலாபிஷேகம் முடியுமுன் யாதொரு விசேஷ உற்சவங்களும் செய்யலாகாது. மண்டலாபிஷேகத்தின் பின்பே உற்சவாதிகளைச் சிறப்பாக பகவானுக்குச் செய்யவேண்டும். கும்பாபிஷேகத்தில் சொல்லப்படும் அறுபத்துநாலு கிரியைகளுள் மண்டலாபிஷேகமே அறுபத்துநாலாவது கிரியையாகும். அதனுல்தான் அந்த மண்டலாபிஷேகம் முடிந்தால்தான் சாங்கோபாங்கமான கும்பாபிஷேகம் பூரணத்தன்மையடைகின்றது. இதுவே மண்டலாபிஷேகச் சிறப்பாம். " ஈசன் திருவருள் முன்நிற்பதாகுக.

சுபம் சுபம் சுபம்

இங்ஙனம்

15-1-71 பக்தர்களின் பணியாளன்,

உத்தராயணச் சிறப்புப்பணி நியாயசிரோமணி, கி. சுப்பிரமணியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்

# கலாவதி நகை மாளிகை
## 239, பிரதான வீதி,
## பருத்தித்துறை.

உரிமையாளர் : Mrs. P. இரத்தினசிங்கம் & சன்ஸ்

போன் : **569**

*Space Donated By*

# *Hindu Acadamy*
**'RAJA GIRI'**
***Point Pedro.***

அன்பளிப்பு

# சத்தியா கலா நிலையம்
சிவன்கோவில் வீதி,
பருத்தித்துறை.



Donated by:-
Mr. K. C. KULARATNAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற
முருகன் அருள் வேண்டுகின்றோம்.

தரமான பொருள் பெற்றோர்
நிறைவான மனம் வாழ்த்தும்

ஜெயலலிதா
நகை மாளிகை

65, செட்டியார் தெரு,
கொழும்பு.

தொலைபேசி. 22548.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முருக வழிபாடு

---

ஆடும் பரிவேல் அணிசேவ லெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானைசகோ தரனே.

மனிதவாழ்வின் இன்றியமையா அடிப்படை கடவுட்கொள்கையாகும். கடவுளொருவர் உண்டு என்ற உணர்வும் அவரை வாழ்த்தி வணங்கி உய்தி அடைவதே பிறவியின் குறிக்கோள் என்பதும் சமயவாழ்வின் முக்கிய அம்சங்களாகும். இந்த நம்பிக்கையோடு ஆதியில் வாழ்ந்த மனிதன் இயற்கையிலே இறைவனை இசைத்தான். மலையிலும் காட்டிலும் நாட்டிலும் கடலிலும் மணலிலும் இறைவனைவைத்துப் போற்றப்பட்டவனே முருகப்பெருமான், மிகப்பழங்காலந்தொட்டே முருகனைக் கண்கண்ட தெய்வமாக நினைத்துப் போற்றிவந்தவர் தமிழர். தமிழ்நாட்டில் முருகன் பெருமையை அறியாதாரில்லை. தமிழ்மக்களின் உள்ளங்கள் முருகனுறையும் ஆலயங்களாகும். முருகா என்று ஒருமுறை கூவியழைத்தாற்போதும்; அவன் அன்பர்க்கு அன்பனாகவும், அடியவர்க்கு எளியவனாகவும், கவிஞர்க்குப் புலவனாகவும் காட்சியளிப்பான். ''நெஞ்சில் ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்'' முருகா என்று ஓதுவார் முன் என்று பாடினார்கள்.

பெருமானைச் சங்கத் தமிழில் வைத்துப் பாடினார் நக்கீரர். புராணத் தமிழில் வைத்துப் பாடினார் கச்சியப்பர், சங்கத் தமிழில் வைத்துப் பாடினார் அருணகிரி. பிள்ளைத்தமிழில் வைத்துப் பாடினார் பகழிக்கூத்தர். இவ்வாறு புலவர்கள் எல்லாரும் தமது வாக்காலும் மனத்தாலும் முருகனைப் பூசித்து மெய்யருள்பெற்றனர். புதுமைக்கவி பாரதி,

"வெற்றி வடிவேலன் — அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ பகையே
துள்ளி வருகுது வேல்"

என்று பாடி ''வேலைச் சிந்தித்தால் பகையறும்'' என்ற நம்பிக்கையைக் கூட்டுகிறார்.

அவன் கையிலுள்ள வீரவேல் விண்ணோர் சிறைமீட்ட தீரவேலாகும். சூரனது மார்பையும் கிரௌஞ்ச மலையையும் துளைத்த வேலாகும். இவ்வேல் குகையைப் பிளந்து பூதத்தைக்கொன்று நக்கீரரைக் காப்பாற்றியதுமன்றி அதனுள் அடைபட்டுக்கிடந்த தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதுபேரையும் சிறைமீட்டுத்தந்தது. நக்கீரர் சங்ககாலத்துத் தலைமைப்புலவர்; ஒருநாள் திருப்பரங்குன்றத்தையடுத்த தடாகக்கரையில் சிவபூசை செய்துகொண்டிருந்தபோது அவர்கவனம் மற்றுமோர் காட்சியில் தலைப்பட்டது. மரத்திலேயிருந்து விழுந்த இலையொன்று பாதி மீனாக நீரிலும் பாதி பறவையாக நிலத்திலும் போவதைக்கண்டார். சிவபூசையிலே மன ஒடுக்கமின்றிக் குற்றப்பட்டார். அதனால் கற்கிமுகி என்ற பூதம் குகையுளடைத்தது. இதற்குமுன் அடைபட்ட பலரங்கிருந்தனர். பூதம் உண்பதற்கு ஆயத்தம்செய்தபோது அங்கிருந்தோர் நக்கீரரை நிந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்தனர். தமக்கு அழிவுதேடவே அவர் வந்தாரெனக் குற்றம்சாட்டினர். ஆனால் நக்கீரருக்கோ முருகப்பெருமானின் சிந்தனையெழுந்தது; உடனே சங்கத்தமிழிற் பாடினார்.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு
ஓவற இமைக்கும் சேண் விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்"

எனத் தொடர்ந்து பாடிக்கொண்டுபோனார். குகையிலே வேல்பாய்ந்தது; குகை பொடிபட்டது; பூதம் கொல்லப்பட்டது; எல்லோரும் கரையேறினர். இதனை அருணகிரிநாதர்.

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவ
னிசைக்குருகி வரைக்குகையை இடித்து வழிகாணும்
பணைக்கைமுக படக்கரட மதத் தவள கசக்கடவுள்
பதத்திடுநி களத்து முளை தெறிக்க — அரமாகும்

என்றும்......

"மலைமுகம் சுமந்த புலவர் செஞ்சொல் கொண்டு
வழிதிறந்த செங்கை வடிவேலா"

என்று பாடியருளினார். எனவே முருகனின் கருணைத் திருவிளையாடலை எண்ணி மகிழ்ந்து தான்பெற்ற பேற்றை மற்ற யாவரும் பெறவேண்டுமென்று வழிபடுத்துவதாக அமைந்ததே திருமுருகாற்றுப்படையாகும்.

அடுத்தபடியாக புராணநாயகனாக முருகன் விளங்கும் தன்மையைக் கவனிப்போம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்தது கந்தபுராணம். இதனை இயற்றிய கச்சியப்பர் சிறந்த முருகபக்தர். குமரகோட்டத்து முருகனை அல்லும் பகலும் வழிபட்டுப்பேணும் பேறுபெற்றவர். இவ்வருட்பேற்றினாலேயே கந்தபுராணத்தைப் பாடத்தொடங்கினார். முருகப்பெருமானே அதற்குத் திருத்தஞ்செய்து தினந்தோறும் ஊக்குவித்தார் என்று கூறப்படுகிறது. முருகன் ஞானந்தான் உருவாகிய நாயகன்; ஞானவித்தகன்; தன்னையடைந்தோர்க்கு ஞானம் வழங்குபவன்; ஈசனோடு ஞானமொழி பேசியவன்; பகைவனாகிய சூரனையே ஞானமுறச் செய்தவன். ஒருமுறை தேவர்களெல்லாரும் அசுரர்களால் துன்பமுற்றனர். தேவர்கள் இன்பமே எந்நாளும் துன்பமில்லையென்று இன்பக்களிப்பில் ஈசனைக்கூட மறந்துவிட்டனர். இதனால் அசுரர்களின் தண்டனை அவர்களைவந்து சாருகின்றது. கொடிய தோற்றமும் கடிய சொற்களும் கரியமேனியும்கொண்டவர் அசுரர். இவர்களுக்கஞ்சித் தேவர்கள் தலைசாய்த்துப் புலால் சுமந்து வாழ்ந்தனர். ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டுயுகங்களுக்கு ஆட்சிசெய்ய வரம்பெற்றவன் சூரன். அவன் தேவர்களைச் சிறைவைத்தபோது தேவர்கள் அஞ்சினர். முருகனுடைய அவதாரமாகும். கச்சியப்பர் இதனைக் குறிப்பிடும்பொழுது எல்லாம்வல்ல பரம்பொருளே முருகனாக அவதரித்தார் என்று சொல்கிறார்.

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமுய்யவேண்டி உதித்தபிரான் அன்பர்களின் அல்லல்போக்கி யருளுவா னன்றோ! தாரகனை எதிர்ப்பதற்கு முதலில் சித்தங்கொண்டார். தாரகன் வழிச்செல்வோரை மயக்கிக் கிரௌஞ்சம் என்ற மலையில் மறைத்துவைப் பவன். வீரவாகுதேவர் போர்க்கோலம்பூண்டு எதிர்த்துச் சென்றபோதும் அவரையும் படைகளையும் மயக்கிவிட்டான் தாரகன். எனவே முருகனே நேரே எதிர்த்துச் செல்கிறார்; கண்டான் தாரகன்.

"ஏழுமதி யன்ன ஆறுமுகங்களும் முந்நான்காதும்
விழிகளின் அருளும் வேலும் வேறுளபடையின் சீரும்
அழகிய கரமீராறும் அணிமணித் தண்டையார்க்கும்
செழுமலரடியும் கண்டான் அவன்தவம் செப்பற்பாற்றே".

பூரணசந்திரனை ஒத்த ஆறுதிருமுகங்களையும், அருள் ஒழுகும் பன்னி ரண்டு நயனங்களையும், ஞானசக்தியாகிய வேலையும், மற்றைய திவ்விய அஸ்திரங்களையும், அழகிய தண்டையொலிக்கும் திருவடிகளையும் கண்டான் தாரகன். இத்தகைய அருட்காட்சியைக் காணப்பெற்றமையால் அவனு டைய தவம் செப்புதற்கு அரியது என்கிறார் ஆசிரியர். சூரனும் இதே போன்று யுத்தகளத்தில் முருகப் பெருமானை நேரேகாணும்பேற்றைப் பெறு கிறான், வீரவாகுதேவர், சமாதானத்தை விழைந்து தூதுவராக வந்தசமயத் தில் பாலன் என்று முருகனைஇகழந்தவன் சூரன். ஆனால் நேரேகண்டபோது தன் கருத்தை மாற்றுகிறான். காரணம் பெருமானுடைய காட்சியை, கண்ட அளவிலேயே அசுரனின் அகந்தை அடங்கியது என்பதுதான். அசுரர்களுக் கேஇத்துணை மனமாற்றத்தை கொடுத்தது என்றால் அன்பர்களுக்குஅதுஎத்து ணைப் பேரின்பத்தைவிளைக்குமென்பதைச்சொல்லவும் வேண்டுமா?

அருணைமுனிவர்'' சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று கண்டு தொழ நாலாயிரம் கண்படைத்திலனே அந்தநான்முகனே'' என்று பாடுகி றார், சூரனும்தனது மனக்கருத்தைமாற்றி மால் அயன் தனக்கும் மேலாம் வானவர் தமக்கும்யார்க்கும்'' மூலகாரணமாய் நின்றமூர்த்தி இம்மூர்த்தி', என்றான் பாலன் என்றுசொன்னவன்பரம் பொருள் என்ற நிலைக்கு வருகின் றான் இம்மூர்த்தி என்று சொல்வதிலிருந்து அவன் முருகனை உணர்வினால் மிக அணுகிவிட்டான் என்பது புலனாகிறது. அணுகிக்கண்ட காட்சியைத் தான்

மூண்டக மலர்ந்த தன்ன
மூவிரு முகமும் கண்ணும்
குண்டல நிரையும் செம்பொன்
மௌலியும் கோல மார்பும்
எண்டகு கரமீ ராறும்
இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையும் சிலம்பு மார்க்கும்
சரணமும் தெரியக் கண்டான்

இந்தக் காட்சியினால் அதாவது மூவிருமுகத்து வள்ளல் முன்னர்வந் தெய்தப் பெற்றதனால், ' ஆ! இவன்தவத்திற்கு அன்றி அறத்திற்கும் முதல் வனன்றோ? என்று போற்றப்படுகிறான்.

கந்தபுராணத்தில் அசுரர்களை அடக்கியதும், தேவர்களுக்கு அருள்புரிந் ததும், பிரமன் கர்வத்தை நீக்கியதும், தெய்வயானை அம்மையைத் தேவர்க ளின் நன்றியின் சின்னமாக ஏற்றுக்கொண்டதும் வள்ளியை மணம்புரிந்த தும் முருகனுடைய கருணைத் திருவிளையாடல்களாகக் கூறப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுக வெப்பத்தினின்று உயிர்களைக் காப்பாற்றிக் கருணை பொழிய வல்லவர். முருகப்பெருமானே ' என்று வியாசர் ஏனைய முனிவர்களுக்கு மொழிந்திருக்கிறார். முருகு என்ற அடிப்பதமே உயிர்களைக் காப்பாற்றும் கருணையுடையவன் என்றகருத்தை வழங்குகிறது. அந்த மூன்றெழுத்துக்களும் உகரமாகிய உயிரை அடக்கியிருப்பன. உகரம் காத்தற்றொழிலை விளக்குவது. எனவே, முருகன் முக்காலமும் காப்பவன் என்ற கருத்தையே நாம் உணரமுடிகிறது. அவனுடைய வேல் ஞானத்தின் சின்னம்: மயில்வாகனம் பிரணவ சொருபம் திருமுகங்கள் ஞானஅடக்கம், அவன் வேலைப் போற்றினார்கள் தேவர்கள் அந்த வேல் அவுணர் என்கின்ற அறியாமையைநீக்கித் தேவர்களாகிய அறிவைப் பிரகாசிக்கசெய்தது, சூரனுடைய மார்பிற்பட்டவுடனே அவன்ஞானம் பெற்றுச் சேவலும் மயிலும் ஆகிறான். வேல்என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் போக்கவல்லது பெருமானுடைய அங்கங்கள் அனைத்திற்கும் ஒரு போற்றிசொன்ன கச்சியப்பர் திருக்கை வேலுக்கு இருதரம் போற்றி சொல்கிறார்.

'' தனித்து வழி நடக்கும் என திடத்தும் ஒருவலத்தும்
இரு புறத்தும் அருகடுத்து
இரவு பகல் துணையதாகும்

என்றுபாடி வேல் துணையாக நிற்கும் தன்மையை அருணகிரிநாதர் விளக்கினார்.

அந்திப்போ தழகுறவே கடித்தருளும்
வழித் துணைவர் அருளும் கோவை
வந்திப் போர் நினைந்தபடி மயில்ஏறி
அயிலெடுத்து வரும் செவ் வேளைச்
சிந்திப் போம் புகழ்ந்திடுவோம் மலரணிவோம்
அவர் கமலத் தாளும் தோளும்
சிந்திப் போம் ஆதலினால் நமது பழ
வினைகளெல்லாம் சிந்திப் போமே ''

பெருமானை மறவாதவருக்கு ஒரு தாழ்வும் இல்லையென்பது அருணகிரி வாக்கு, இவர்முருகனிடமிருந்து சும்மாவிருக்கின்ற சுகத்தைப் பெற்றவர் தன் செயலற்று அவன் செயலிலே ஆயிரம், ஆயிரம்பாடல்களை அள்ளிச்சொரிந்தவர். இவர் அலங்காரத்தில் முருகனை அழகுபடுத்தினார்.

'' சேந்தனைக் கந்தனைச் செங்கொட்டு வெற்பனைச் செஞ்சுடர் வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்கு வள்ளிக்
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார் மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாத வார்க் கொரு தாழ்வில்லையே ''

செந்தமிழ் நூல்விரித்த பெருமான் முருகன். அவன் சிறந்த இலக்கணப் புலவன். இறையனார் களவியலுக்கு உரை முடிவுகண்டவன் தமிழ் நாட்டில் குறக்குடியில் தோன்றிய தமிழணங்கு வள்ளியம்மையாரிடம் தமிழ்கேட்க விழைந்தான். பேரினைக்கேட்டான். ஊரினைக்கேட்டான். ஊர்க்குச்செல்லும் வழியினைக்கேட்டான். அவள் வாயிலிருந்து வெளிப்படும் தேனூறு கிளவிக்கு வாயூறிநின்றான்.

பேராதரிக்கும் அடியவர் தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்கவல்லவன். என்பதைப் பிள்ளைத்தமிழில் அழகாகப் பாடிவைத்தனர். பாலனாகிய முருகன் ஞானம் வழங்குந்தன்மையை அருமையாகப் பிள்ளைத்தமிழ் மொழிகிறது. இம்மைப்பேறு மறுமைப்பேறு ஆகிய இரண்டுக்கும் அவனருளே தேவை. இவ்வுலகில் வேண்டிய வரங்கொடுப்பவன், அவ்வுலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாத வீடுந்தரக் கடவன் என்று அம்புலிக்குக் கூறுவதுபோல எமக்குத் கூறி வழிபடுத்துகிறார் பக்தர்ஒருவர் எண்ணியதை முடிக்கும் சிறப்பு முருகப் பெருமானின் முதன்மைச் சிறப்பாகும். இதனாற்றான் "முன்னியது முடித்த லின்முருகொத்தியே" எனப்பாடி அரசனொருவனைப் போற்றுகிறார். நக்கீரர் தேவர்களின் பகைநீக்கி பிரமனின் கர்வம் போக்கி, அருணகிரியின் பழிநீக்கி, குமரகுருபரரின் மூங்கை நீக்கி, அருள்கொடுத்த வள்ளல் எம்முருகன். சங்க இலக்கியம் முப்பத்தாறில் முதலிலக்கியம் திருமுருகாற்றுப்படை அதன் கதா நாயகன் முருகன் தமிழ்மக்களின் பக்திக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். பழந்தமிழ் இலக்கணநூலாகிய தொல்காப்பியம "சேயோன்" என்று முருகனைக் குறிக்கிறது. எனவே மிகப்பழம் பெருமைவாய்ந்த வழிபாடு முருகவழிபாடே என்பதில் மிகையொன்றுமில்லை.

துய்ய தோர் மறைகளாலும்
துதித் திடற்கரிய செவ்வேல்
செய்ய பேரடிகள் வாழ்க
சேவலும் மயிலும் வாழ்க
வெய்ய சூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில் சீரடியார் வாழ்க
வாழ்கவிப் புவன மெல்லாம்.

"சிவத்தமிழ்ச் செல்வி"
பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOWRI TRADERS

Wholesale and Retail dealers in

GROCERIES AND OILMAN GOODS

41, ST. JOHN'S ROAD, COLOMBO - 11

*With best compliments from*

# *Ranjana Stores*

52, Bankshall Street,

Colomdo-11.

Phone: 25851


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமுருகன் அருள்வேண்டிநிற்கும்

# சேகர்ஸ் ஜுவல்லர்ஸ்

44, செட்டியார் வீதி, கொழும்பு - 11.

நவநாகரீகத் தங்கநகைகளுக்கு

நம்பிக்கையான பிரசித்திபெற்ற வியாபாரிகள்

*Visit ;*

# SEKARS JEWELLERS

**44, Sea Street, Colombo - 11.**

For all kinds of Jewellery latest and Novelty Designs

Orders Executed promptly to satisfaction.

Dial: **25485.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

# சுசீலா ஆபரண மாளிகை

பிரதான வீதி, பருத்தித்துறை.

உரிமையாயர் : K. V. தெய்வேந்திரம்

---

உங்களுக்குத் வேவையான

மருந்து வகைகள்,
உணவுப் பொருட்கள்,
சாய்ப்புச் சாமான்கள்,
செருப்பு, சப்பாத்து, பட்டு, பருத்தி
ஐவுளித் தினுசுகள்.

மற்றும்

ரேட்மாஸ்டர் துவிசக்கரவண்டி,
உதிரிப்பாகங்கள்
மின்சார உபகரணங்கள்

ஆகியவைகளுக்கு

**யாழ்ப்பாண**
**ஐக்கிய வியாபாரச் சங்கம்**
**420, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

*Donated By*

# *CITY BAKERY Ltd.*

**11, Sea Street, COLOMBO-11.**

*83 Years Old Gold Medalist for Best Bread*

உருசியான உணவுக்கும், தரமான கேக் வகைகட்கும்
பிரசித்தி பெற்றது

# சிற்றி பேக்கரி

11, செட்டித்தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைக்கிருள் சரஸ்வதி!

முருகன் திருவருளால் கும்பாபிஷேகவிழா
இனிதே நடந்தேற எமது வாழ்த்துக்கள்

" முருகன் குமரன் குஃனென்று மொழிந்
துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவமே புவியும் பரவுங்
குருபுங் கவேவன் குணபஞ் சரனே.

தலைநகரில்
தரமான சைவ உணவுத் தேவைகட்கு

# ஸ்ரீ சரஸ்வதி கபே

## 230, செட்டியார்தெரு

## கொழும்பு.

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேக விழாவிற்கு எங்கள் வாழ்த்துக்கள்

வாருங்கள் — வாங்குங்கள் — நிறைவுகொள்ளுங்கள்

# இரத்தினமஹால் நகைமாளிகை

97, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# Rathnamahal Jewellers

**97, Sea Street, Colombo-11.**

Telephone : 31357.

பெருகுக முருகன் திருஅருள்

கும்பாபிஷேகம் பொலிவுடன் நிறைவுபெற

வாழ்த்துகின்றோம்.

# லலிதா நகைமாளிகை

தலைநகரில் பிரசித்திபெற்ற

தங்கநகை, இரத்தினக்கல் வியாபாரிகள்

விசயம் செய்யுங்கள் குளிரூட்டப்பட்ட காட்சியறைக்கு.

99, 101, 103, 105, செட்டியார்தெரு, கொழும்பு.

தொலைபேசி : 23691

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

# கௌரி ரேடிங் கம்பனி

56, 3-ம் குறுக்குத்தெரு, கொழும்பு - 11.

உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் விற்பனையாளர்.

தொலைபேசி: 22353, 23105.

*With best complements*

# *Western Jewellary Mart*

60, SEA STREET, COLOMBO - 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best complements of:*

# NESAN OIL MILL

## *Welisara.*

*With the Best con plements of:*

# V. Somasundaram & Co.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

**234, Keyzer Street**

**COLOMBO 11.**

Phone: 26462

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியானவை

மில்க்வைற் தயாரிப்புகளே

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவாகும்

**MILK WHITE SOAP**

**K. K. S. Road, JAFFNA.**

*With Best Complements from*

*Asoka Hardware Stores*

**348, Old Moor Street,**
**COLOMBO-12.**

Phone: **35727**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம் சிறப்புடன் நிறைவேற

முருகன் அருள் வேண்டுகின்றோம்.

என்றும் எழிலுடன் திகழ

## நித்திய அழகிற்கும் பெறுமதிக்கும்

# நித்தியகல்யாணி

# நகைமாளிகை

தங்கம், வைரம் நகைவியாபாரம்

# Nithyakalyani Jewellers

## 40, SEA STREET,

## COLOMBO - 11.

தொலைபேசி : 21617.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

கரவெட்டி துன்னாலையப்பதி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகோவிலில் இவ்வாண்டு நடைபெறும் மகா கும்பாபிஷேகநன்னாளில் அதுபற்ற வெளியிடப் பெறும் விசேஷ மலரில் திருப்புகழைப் பற்றியும் சிறிது சிந்தனைக்குக் கொண்டுவரவிரும்புகிறேன்.

உலகமாயாமோகத்திலே கிடந்து உழலும்நமக்கும் முருகனுக்கும் வெகு தூரம் .சமீபமான இடமாயின் நடந்து சென்று விடலாம் பத்து இருபதுமைல் தூரமாயின் கார், பஸ் முதலியவற்றில் சென்று விடலாம். நூறுஇருநூறு மைல் தூரமாயின் புகைவண்டியிற் சென்றுவிடலாம். ஐயாயிரம் பத்தாயிரம் மைல்களாயின் விமானத்திலல்லவா செல்ல வேண்டும் திருப்புகழ் நம்மை முருகனை அடையச் செய்யும் விமானம் போன்ற சாதனம்

வேதம் வேண்டாம் சகலவித்தைகள் வேண்டாங்கீத
நாதம்வேண்டாம் ஞான நூல் வேண்டாம்——ஆதி
குருப்புகழை நாடுகின்ற கொற்றவன் நாள் போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்—என்றுஆன்றோர்

பாடினர், திருப்புகழ் மனத்தளர்ச்சிக்கு ஆணி. பரகதிக்கு ஏணி

இறைவன் நமக்குத்தந்த குரல் பேசுவதற்கன்றிப் பாடுவதற்கும் என்பதை நாம்உணர வேண்டும், மாடுஆடு முதலிய மிருகங்களை நாம் கால் நடைகள் என்கின்றோம். நம்மை ஒருவன் கால்நடைகள் என்று அழைத்தால் கோபம் வருகிறது ஏன். நாம் காலாலே நடவாமல் கையாலேயா நடக்கிறோம். சற்றுச்சிந்திக்க வேண்டும் பெரும்தீனி தின்னும் மாடு எருமை யானை முதலிய பிராணிகளை நாம் வாயில்லாத பிராணிகள் என்கின்றோம். நமக்கு இறைவன் தந்தவாயினால் அவன் புகழ்பேசவேண்டும் பாடவேண்டும்.

'' கடியேறு மலரோனைக் கடுஞ் சிறையில் வைத்து
படியாதி எவ்வுயிரும் படைத்தருளும் பிரானை
முடியாத முதலோனை மூவர் பெருமானை
வடிவேலன் தனைப் பேசா வாயென்ன வாயே
வள்ளிமா மாணாளனைப் பேசா வாயென்ன வாயே

-- மயூரபுராணம்

புதுப் புதுக்கவிதைகளைப் புனைந்து பாடுவதிலும் அருள்பெற்ற அடியார் பாக்களைப்பாடி நாம் விரைவில் கடைத்தேறலாம். கருணாமூர்த்தியாகிய கந்தப் பெருமான் மூன்றுபேருக்கு உபதேசம்செய்தார். தேவர்களிலே சிவபெருமானுக்கு உபதேசம்செய்தார். முனிவர்களுக்குள்ளே அகத்தியருக்கு உபதேசம்செய்தார். மனிதர்களுக்குள்ளே அருணகிரிநாதருக்கு உபதேசம்செய்தார். உலகத்திலே மாணிக்கம் அற்பம்; மண்ணாங்கட்டி அதிகம். சந்தணம் அற்பம்; கள்ளி அதிகம். கெட்டவர்கள் அநேகம்பேர்; நல்லவர்கள் ஒருசிலர். அருணகிரிநாதர் மனிதகுல மாணிக்கம். அவர் முருகப்பெருமான்மேல் பதினாறாயிரம் திருப்புகழைப் பாடினார் என்று கூறப்படுகிறது. ஆனால் அவை முழுவதையும் சைவஉலகம் பாதுகாத்துவைக்கத் தவறிவிட்டது. இப்போது 1361 திருப்புகழ்ப் பாடல்கள் சேகரிக்கப்பட்டுத் தமிழ் நாட்டில் வழங்குகுன்றன. அத்தனையும் சந்தக் கவிகள். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் தருவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழில் இராமயணக்கதைகள், பாரதக் கதைகள், பெரியபுராணக் கதைகள், கந்தபுராணக்கதைகள் முதலிய பலநூறு கதைகள் சேர்த்துப் பாடப்பட்டிருக்கின்றன. அதிலிருந்து அருணகிரிநாதரின் அறிவின் ஆற்றல் நமக்குப் புலனாகின்றது. முருகனிடம் உபதேசம் பெற்றவரல்லவா அவர்.

''ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம் - மோனவீ
டேறலாம் யானைக்கிளையான் திருப்புகழைக்
கூறினார்க்காமேயிக் கூறு,' என்பார் பெரியோர்கள்.

தான் உண்டாக்கிய பொருளுக்கு அல்லது தனக்குச் சொந்தமான பொருட்களுக்கு தானே பெயரிட்டழைப் பதுவழக்கம். ஒரு வீடுகட்டினால் சாந்தி இல்லம்—அருள்நிலையம்—தங்கமாளிகை என்றுஏதேதோ தான்விரும்பிய பெயரை வைக்கிறான் மனிதன். நூல்செய்தவன் அந்த நூலுக்குத் தான்விரும்பிய பெயரை வைக்கிறான். ஆனால் அருணகிரியார் பாடிய சந்தப்பாடலுக்கு முன்னமே முருகன் பெயரிட்டு விட்டான். சிவபிரான் சுந்தரரைப்பார்த்து எனக்கு அர்ச்சனை பாட்டுத்தான் சொற்றமிழ் பாடுஎன்றார். முருகன் அருணகிரியாரைப்பார்த்துச் சொற்றமிழ் பாடுஎன்றாரில்லை திருப்புகழ் பாடுஎன்றார்.

திருப்புகழ் விருப்பமொடு செப்பென
எனக்கருள் கைமறவேனே

என்று அதனை அருணகிரிநாதர் நமக்குத் தெரிவிக்கிறார்.

அருணகிரிநாதர் ஞானநிலை பெற்றுப் பாடிய பாடல்திருப்புகழ். திருப்புகழில் விலைமாதர் உறவைப் பற்றிப்பல இடங்களில் விரித்துப் பாடப்பட்டிருப்பதால் அது பக்திநூலாக மாட்டாது என்று கூறுவதற்கிடமில்லை. மாதர் உறவை நாடும் சிற்றின்ப நாட்டமுடையோருக்குப் பேரின்பநிலை கிட்டாது.

தினைத்துணை உள்ளதோர்
பூவினில் தேன்உண்ணாதே
நினைத் தொறும் காண்தொறும்
பேசும் பொழுதெப் பொழுதும்
அனைத் தெலும்பு உள்நெகஆனந்தத்தேன்சொரியும்.
குனிப்புடையான்கழற் கேசென்றூதாய் கோத்துமட

என்று பாடுகிறார் மாணிக்கவாசகர். சிற்றின்பவேட்கைதணிக்கத் திருப்புகழ் சிறந்தமருந்து. அதனைப்பாடியுணர்ந்த தாயுமானவர் ''கந்தர்அநுபூதி பெற்றுக் கந்தரனுபூதிசொன்ன எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளோ'' என்று கூறினார்.

'வாக்கிற்கு அருணகிரி' என்று புகழ்ந்து பேசப்படுபவர் அருணகிரிநாதர். ஒருமுறை அருணகிரிநாதரும் அடியார்களும் செல்லும் வழியில் சில புலவர்கள் காது அறுபட்டு இரத்தம்வடிய வந்தார்கள். அருணகிரிநாதர் அதன் காரணத்தை வினவினார். வில்லிபுத்தூரர் என்னும் அகந்தையுடைய புலவர் தன்னுடனே வாதிட்டுத் தோற்ற புலவர்களுக்கு குடுமியளவாய்க் காதைக் கத்தியால் குடைந்து தோண்டிவிடும் பரிதாப சம்பவத்தைக் கேள்விப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புலவருடைய செருக்கை அடக்கத் தானேசென்று அவருடனே வாதிட்டார். இருவரது கைகளிலும் கூரான இரண்டு கத்திகள். போட்டி ஆரம்பமாகியது. ஒருவர்பாட மற்றவர் பயன் கூறவேண்டும். வில்லிபுத்தூரர்பாடப்பாட அருணகிரிநாதர் பயன்கூறி முடிந்தது. இனி அருணகிரிநாதர்பாட வில்லிபுத்தூரர் பயன்கூறவேண்டும். பலபாட்டுக்கள்பாடி முடிந்தன. வில்லிபுத்தூரரும் பயன் சொல்லிக்கொண்டே வந்துவிட்டார். முருகப்பெருமானை நினைந்து தகரவரிசையில் ஒரு பாட்டுப் பாடினார். இதனைப் பாடியதும் வில்லிபுத்தூரர் தறதறவென விழித்தார் பயன்சொல்ல முடியாது திகைத்தார். கையிலிருந்த கத்தியை அருணகிரிநாதர் கையில் கொடுத்துத் தனது காதை வெட்டும்படி தாழ்ந்துநின்றார். கருணை உள்ளம் படைத்த அருணகிரிநாதர் கத்தியைப் பிடுங்கி எறிந்துவிட்டு, நடை பயிலும் குழந்தைகூட விழுந்துவிழுந்து எழுந்துதானே நடக்கின்றது. இளம் புலவர்களுக்கு இனி இப்படிச் செய்யாதே போ என்று அப்பால் போனார். இந்தச் சம்பவம் அருணகிரியாரின் கல்வித் திறனைக் காட்டுகிறது.

**தா. பொன்னம்பலம்**
கதாகாலக்ஷேபமணி

திருவடி நீழல்
அளவெட்டி, 1–6–76.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

# முருகன் ஸ்டோர்ஸ்

வடதுன்னை அல்லையம்பதி
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

மஹா கும்பாபிஷேக விழாவுக்கு எங்கள்

பக்தி நிறைந்த வாழ்த்துக்கள்

UNIVERSITY OF JAFFNA LIBRARY
ARCHIVES
UNIVERSITY OF JAFFNA LIBRARY



University of Jaffna
250274
Library

# முருகன் ஸ்டோர்ஸ்

பிரதான வீதி, வாழைச்சேனை.

ARCHIVES

உரிமையாளர் : நீ. முத்துக்குமாரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
250274

அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவில்
மஹா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெறுவதற்கு

எமது வாழ்த்துக்கள்

# சோதிட விலாச புத்தகசாலை

## 46, பெரியகடை, யாழ்ப்பாணம்.

உங்கள் அச்சு வேலைகளை
அழகாக ஆக்கிப் பெற்றுக்கொள்வதற்கு

Donated ...
Mr. K C. ...ATNAM

சோதிடப்பிரகாச யந்திரசாலை

கொக்குவில்.

சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொகுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

அல்லையம்பதி ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில்

மஹா கும்பாபிஷேக விழாவுக்கு

எமது மனமுவந்த நல்வாழ்த்துக்கள்

போதகம் தரு போதேவ நமோநம
நீதி தங்கிய தேவா நமோநம
பூதலம் தனை ஆழ்வாய் நமோநம பணியாவும்

பூணுகின்ற பிரானே நமோநம
வேடர் தங்கொடி மாலா நமோநம
போதவன் புகழ் சுவாமி நமோநம அருதான

வேத மந்திர ரூபா நமோநம
ஞான பண்டித நாதா நமோநம
வீர வண்டைகொள் தாழா நமோநம அழகான

மேனி தங்கிய வேளே நமோநம
வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறு கொண்ட விசாகா நமோநம - அருள்தாராய்.

# பரமேஸ்வரி ஸ்டோர்ஸ்

## மட்டக்களப்பு.

உரிமையாளர் : மூ. இ. பெரியதம்பி

தொலைபேசி : **383**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org